இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *1767/2021*
(சிறப்பு அனுமதி மனு (உ) எண் *6731/2021*-**இலிருந்து எழுகிறது)**

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

நீதியரசர் முனைவர் தனஞ்செய ஒய். சந்திரசூட்:

தேர்வாராய்ச்சியை எளிதாக்குவதற்காக இந்த தீர்ப்புரை பின்வரும் பிரிவுகளாக வகுக்கப்படுகிறது:

அ. மெய்நிகழ்ச்சி சார்ந்த பின்னணி

ஆ. உச்ச நீதிமன்றம் முன்பான நடவடிக்கைகள்

இ. சட்டநிலையும் மற்றும் தேர்வாராய்வும்

இ.1. திறந்த நீதிமன்றங்கள் மற்றும் இந்திய நீதித்துறை

இ.2. ஊடகங்களின் சிந்தனை வெளியீட்டுச் சுதந்திரம்

இ.3. பொதுக்கட்டுரை, ஊடக அறிவிப்பு மற்றும் நீதித்துறையின் பொறுப்புடைமை

இ.4. நீதித்துறை நடப்புமுறையும் அதன் சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடுகளும்.

ஈ. முடிவுரை

1) அனுமதி வழங்கப்பட்டது.

அ. உண்மை நிகழ்வு தொடர்பான பின்னணி

2. இம்மேல்முறையீட்டில் இரண்டு அரசியலமைப்பு அதிகாரிகளின் அதிகாரங்களை சீர்தூக்கிப் பார்ப்பதிலுள்ள ஒரு நுணுக்கமான கேள்வி ஊடகத்தின் சிந்தனை வெளியீடு மற்றும் பேச்சு சுதந்திரம், குடிமக்களுக்கான தகவல் அறியும் உரிமைகளும் மற்றும் தேசத்திற்கான நீதித்துறையின் பொறுப்புடைமை பற்றிய அதிகப்படியான வாதங்களை எழுப்பியுள்ளது. ஒரு நீதிபதியின் அதிகார உரிமை நீதிசார்ந்த நடவடிக்கைகளை நடத்துவதற்கும், மேலும், கேட்பு நடவடிக்கைகளின்போது உரையாடல்களை ஏற்றுக்கொள்வதுமாகும். எனவே ஊடகங்களின் சுதந்திரமானது தீர்ப்புரைகளை சரியாக அறிவிப்பதுமின்றி மாறாக, நீதிசார்ந்த நடவடிக்கைகள் கலந்தாய்வுகளுக்கு வரப்பெற்றுள்ளன. நீதிசார்ந்த நடப்புமுறைகளின் எல்லைக்கோடுகளை வரையறுப்பவைகள் எவை? தகவல்களின் தடையற்ற ஓட்டத்தினால் வரையறுக்கப்பட்ட காலத்தில் செயல்பாட்டிலுள்ள தொடர்புடைய நீதிமன்றங்கள் யாவை? நீதிமன்ற அறைகளில் ஊடகங்கள் பணியாற்றுவதற்கான நோக்கம் என்ன? எல்லாவற்றுக்கும் மேலாக, சோதனைகள் மற்றும் சமநிலைகளின் சிறப்புத் திட்டத்தின்படி கண்டறியப்பட்ட அரசியலமைப்பு வரைச்சட்டத்தினுள் இந்திய தேர்தல் ஆணையத்தின்[1] இந்த வழக்கில் முறைமன்றம் சார்ந்த கவனக்குறைவிலிருந்து அரசமைப்பு தகுநிலையானது ஒரு காப்புரிமை என்ற வாதுரைக்கு எதிர்ப்பு தெரிவிக்கமுடியுமா? இவ்விதமான ஆக்கக்கூறுகள் ஒவ்வொன்றும் இத்தீர்ப்புரையில் குறிப்பிடப்படும்.

---

1. "தே.ஆ."

3. சென்னை உயர் நீதிமன்ற அதிகாரவரம்பினுடைய நீதியர் ஆயத்தில் 30 ஏப்ரல் 2021 தேதியிடப்பட்ட ஓர் ஆணையிலிருந்து இந்த சிறப்பு அனுமதி மனு[2] எழுகிறது. தமிழ்நாடு கரூர் சட்டமன்ற தொகுதியில் 135-ஆவது வாக்குச்சாவடிகளில் கோவிட் தொடர்பான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் பின்பற்றப்படுகிறதை உறுதிசெய்வதற்காக அரசமைப்பின் உறுப்புக்கூறு 226-இன் கீழ் ஒரு நீதிப்பேராணையை[3] இந்நீதிமன்றம் அனுமதித்தது. கேட்பு நடவடிக்கையின்போது, தேர்தல்களின்போதான ஒழுங்குமுறை மற்றும் கோவிட்-19-இன் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு அவர்கள் தவறியதின் காரணமாக, கோவிட்-19-னுடைய வழக்கு எண்ணிக்கை-களில் உள்ள தற்போதைய அலையெழுச்சிக்கு தேர்தல் ஆணையத்தை பொறுப்புடைமையாக்கி, சில கூற்றுகளை நீதியர் ஆயம் செய்ததாக சாட்டுரைக்கப்பட்டது. விவாதத்திற்குட்பட்ட இவ்விதமான வாய்மொழி கூற்றுகள் உயர் நீதிமன்றத்தால் கூறப்பட்டவை என்றும், ஒரு தனிப்பட்ட அரசமைப்பு அதிகாரியான தேர்தல் ஆணையத்தின் தோற்றத்தை கறைப்படுத்தியதாகவும், மேலும், அடிப்படையற்றது என்றும் தேர்தல் ஆணையம் சாட்டுரைக்கிறது.

4. தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம், அசாம் மற்றும் புதுச்சேரி[4] சட்டமன்றங்களுக்கு பொதுத் தேர்தல் என்று தேர்தல் ஆணையம் 26 பிப்ரவரி 2021 அன்று அறிவித்தது. தமிழ்நாடு மாநில தேர்தல் அட்டவணை 6 ஏப்ரல் 2021 அன்று தேர்தல் எனவும், 2 மே 2021 அன்று வாக்கு எண்ணிக்கை

---

2. "சி.அ.ம."
3. நீ.பே.ம. எண் 10441/2021
4. பிரெஸ் நோட் எண் ஈசிஐ/பிஎன்/16/2021

என்பதையும் உட்கொண்டிருந்தது. தேர்தலுக்கு தயாராகிக்கொண்டிருக்கையில், அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொதுச் செயலாளர்களுக்கு தேர்தலின்போது கோவிட்-19 ஒழுங்குமுறை தொடர்பான அறிவுரைகளை கடைப்பிடிக்கும்படி வலியுறுத்தி தேர்தல் ஆணையம் 12 மார்ச் 2021[5] தேதியிடப்பட்ட கடிதத்தை வழங்கியது. வாக்குப்பதிவு கட்டத்தின்போது, அரசியல் கட்சிகளால் களமிறக்கப்பட்ட வேட்பாளர்களால் சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல் போன்ற விதிமுறைகள் மற்றும் இதர கோவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகள் போன்றவை கடைப்பிடிக்கப்படவில்லை என்று கூறி அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் 9 ஏப்ரல் 2021[6] தேதியிடப்பட்ட மற்றொரு கடிதத்தை வழங்கியது. மேலும் விதிமுறைகளை மீறும் நேர்வுகள் தொடருமாயின், பொதுக் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் ஆகியவற்றை தடைசெய்வது குறித்து தேர்தல் ஆணையத்தால் பரிசீலிக்கப்படும் என்பதும் கருத்திற்கொள்ளப்பட்டது. விளைவாக, பிரச்சார தினங்களின்போது மாலை 7.00 மணி முதல் காலை 10.00 மணிக்கு இடையே தெருக்கூத்துகள், பேரணிகள் மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு 16 ஏப்ரல் 2021[7] தேதியிடப்பட்ட ஆணையின்வாயிலாக தடைவிதித்தது. அதேநாளில் கோவிட்-19 தொடர்பான பாதுகாப்பு விதிமுறைகளை கண்டிப்புடன் கடைப்பிடிக்கவேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்தி மற்றொரு கடிதம்[8] வழங்கப்பட்டது.

---

5. கடித எண் 4/21/2021/எஸ்.டி.ஆர்./பகுதி-1
6. கடித எண் 4/2021/எஸ்.டி.ஆர்./பகுதி-1
7. ஆணை எண் 464/டபிள்யூ.பி.-எல்.எ./2021
8. கடித எண் 464/டபிள்யூ.பி.-எல்.எ./2021

5. கரூர் சட்டமன்ற தொகுதி 135-இன் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளரும் மற்றும் மாவட்டச் செயலாளருமான எதிர்மேல்முறையீட்டாளரால் சென்னை உயர் நீதிமன்றம் முன்பு ஒரு நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார். கோவிட்-19 வழக்குகளின் எண்ணிக்கையில் உள்ள அலையெழுச்சியை குறித்துக்காட்டி எண்ணிக்கை சாவடிகளில் உள்ள அலுவலர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தே.ஆ. 16 ஏப்ரல் 2021 அன்று கடிதம் ஒன்றை எதிர்மேல்முறையீட்டாளர் அனுப்பினார். பதில் எதுவும் பெறாத காரணத்தினால், எதிர்மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தை அணுகி கோவிட்-19 விதிமுறைகளுக்கிணங்க ஏற்பாடுகள் செய்யவும் மற்றும் திறமான நடவடிக்கைகளை எடுப்பதன்வாயிலாக கரூர் சட்டமன்ற தொகுதி 135-இல் 2 மே 2021 அன்று நியாயமான வாக்கு எண்ணிக்கையை உறுதிசெய்வதற்கான ஒரு கட்டளை கிடைக்கப்பெற முயற்சித்தார்.

6. சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு. சஞ்சீப் பேனர்ஜி மற்றும் நீதியரசர் செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியர் ஆயத்தினரால் இம்மனு விசாரிக்கப்பட்டு, 26 ஏப்ரல் 2021 அன்று பின்வரும் வாசகங்களின்படி ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது:

> "4. [...] ஏப்ரல் 6, 2021 அன்று மாநிலத்தில் வாக்குப்பதிவு பெரும்பாலும் அமைதியாக நடைபெற்றபோதிலும், தேர்தல் பிரச்சாரங்கள் மற்றும் பேரணிகளின் சமயத்தில் கோவிட்-19 நெறிமுறைகளை அரசியல் கட்சிகள் பின்பற்றியதை தேர்தல் ஆணையம் உறுதிசெய்யவில்லை என்பது

கவனிக்கப்படவேண்டும். இந்நீதிமன்றத்தில் அதேபோன்று உத்தரவுகள் இருந்தபோதிலும், ஒவ்வொரு தேர்தல் மனுவின் அநேகமான ஆணைகளின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் கூறுவதைப்போல, பிரச்சார காலத்தின்போது கோவிட் நெறிமுறைகளைக் கடைப்பிடித்திருக்கவேண்டும் என்றும், அத்தகைய தனிச்சிறப்புவாய்ந்த நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் தேர்தல் ஆணையம் தவறியிருக்கக்கூடுமென்றும், பிரச்சாரங்களும் மற்றும் பேரணிகளும் இடைவெளி விதிமுறைகளைப் பின்பற்றாமல் நடத்தப்பட்டது என்றும், மேலும் நடத்தை விதிகளின் இதர வேண்டுறுத்தல்களை வேண்டுமென்றே புறக்கணித்ததில் தேர்தல் ஆணையம் தன் பங்கிற்கு அமைதியாகச் சென்றுள்ளது.

5. மற்ற சில மாநிலங்களைப்போல இந்த மாநிலம் மோசமாக பாதிப்படையவில்லை என்றபோதிலும், தினசரி அடிப்படையின்பேரில் நேர்வுகளின் எண்ணிக்கையிலுள்ள விரைவான அலையின் நிமித்தமாக, ஏறத்தாழ ஒரு வாரத்திற்கு அப்பால் இருக்கின்ற மே 2, 2021 அன்று வாக்கு எண்ணிக்கையின்போது பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, தற்போது நிலவிவரும் கடுமையான சூழ்நிலையின் காரணமாக ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருக்கவேண்டும். அரசியலோ அல்லது அரசியலற்றதோ, வாக்கு எண்ணிக்கை தயக்கமாகவோ அல்லது காலங்கடந்தோ இரண்டில் எந்த முறையில் நடைபெற்றாலும், கூடுதலான அலையெழுச்சிக்கு ஒரு வினையூக்கியாக வாக்கு எண்ணிக்கை எக்காரணத்தினாலும் அமைந்துவிடக்கூடாது. பொது சுகாதாரம் என்பது தனிமனிதனின் மதிப்பு முக்கியத்துவமாகும், எனவே மேற்கூறப்பட்டது குறித்து அரசமைப்பு அதிகாரிகளுக்கு நினைவுபடுத்தவேண்டுமென்பது வேதனை

அளிக்கிறது. குடிமக்கள் உயிர்வாழும்போது மட்டுமே அவர்களுக்கு மக்களாட்சி குடியரசு உத்தரவாதமளித்த பிற உரிமைகளை அவர்கள் துய்த்து மகிழமுடியும். பாதுகாப்புடன் உயிர் வாழ்வது ஒன்றே இப்போதைய சூழ்நிலையாகும் எனவே மற்றவையெல்லாம் அதன்பின் வருவதாகும்.

6. கரூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், இரண்டு கூடாரங்கள் அதாவது, 3,500 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒன்றும், 4000 சதுர அடி பரப்பளவு கொண்ட மற்றொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேட்பாளர்களான 77 நபர்களில் பெரும்பாலானவர்கள் வாக்கு எண்ணிக்கையின் சமயத்தில் முகவர்களை ஈடுபடுத்தும்பொருட்டு குறிப்பிடப்பட்ட இடப்பரப்புகள் போதுமானதா என்ற நீதிமன்றத்தின் வினவுதலுக்கு, தனிப்பட்ட வேட்பாளர்கள் இரண்டுபேர் வாக்கு எண்ணிக்கையின் நேரத்தில் அவர்கள் முகவர்களை ஈடுபடுத்தப்-போவதில்லை என்று தெரிவித்தனர் என்றும், பெரிய அரசியல் கட்சிகள் ஒன்பதிலிருந்து ஏழு மட்டுமே முகவர்களை ஈடுபடுத்தக்கூடுமென்று அவர்கள் எழுத்துப்பூர்வமாக உறுதிசெய்துள்ளதாக தேர்தல் ஆணையம் கோரியுள்ளது.

7. அத்தகைய சூழ்நிலையில், இரண்டு தேர்வுசெய்யப்பட்ட கூடாரங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்பொருட்டு கோவிட் நடத்தை விதிகள் மற்றும் உரிய நடவடிக்கைகள் எடுத்திட இயலாது என்று தேர்தல் ஆணையம் எதிர்பார்க்க முடியாது. ஆறு கூடுதல் வாக்கு எண்ணிக்கை குழுமத்தை ஏற்பாடு செய்ததன் காரணமாக இடைவெளி நியமங்களை கடைப்பிடிக்க இயலும் என்று தேர்தல் ஆணையம் தெரிவிக்கிறது.

8. ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மையங்களிலும் அதேபோன்று உரிய நடவடிக்கைகளைப் பின்பற்றிடவேண்டுமென்றும், மேலும், முறையான சுகாதாரம், உரிய நலவியல் சூழ்நிலைகள், முகக் கவசம் அணிவதை இன்றியமையாததாக்குதல் மற்றும் இடைவெளி நியமங்களுக்கு கீழ்ப்படிதல் போன்றவையை கடைப்பிடித்தால் மட்டுமே வாக்கு எண்ணிக்கையைத் தொடங்கவும் அல்லது தொடர்ந்திடவும் வேண்டும், உரிய நடவடிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட தேர்தல் ஆணையம் மற்றும் தலைமை தேர்தல் அலுவலர் ஆகியோர் மாநில சுகாதார செயலாளர் மற்றும் பொதுநல இயக்குநரை கலந்து ஆலோசிக்க வேண்டும்.

9. அனைத்து வாக்கு எண்ணிக்கை மையங்களிலும் போதுமான நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு முழுநிறைவான தொகுப்பை தேர்தல் ஆணையம் வழங்கிடும்போது இச்சூழ்நிலையை மறு சீராய்வு செய்வதற்கு இவ்விடயம் ஏப்ரல் 30, 2021 அன்று பட்டியலிடப்படும். [...]"

7. கேட்பு நடவடிக்கையின்போது, தேர்தல் ஆணையமானது "கோவிட்-19 இரண்டாம் அலை ஏற்படுவதற்கு தனிப்பட்டமுறையில் பதில் சொல்ல கடமைப்பட்டது" என்றும், மேலும் தேர்தல் ஆணையமானது "கொலை குற்றச்சாட்டுகளுக்கு ஆட்படவேண்டும்" என்று உயர் நீதிமன்றம் வாய்மொழியாக கருத்துரைத்ததாக சாட்டுரைக்கப்படுகிறது. இவ்வகையான கூற்றுகள், உயர் நீதிமன்ற உத்தரவின் ஒரு பகுதியாக இல்லாதபோதும், செய்தித்தாள், மின்னணு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் அறிவிக்கப்பட்டது.

8. திரு. சுதிப் ஜெயின், துணை தேர்தல் ஆணையாளர் மற்றும் இதர அவலர்களுக்கு எதிராக கொல்கத்தா, கர்தா காவல் நிலையத்தின் இ.த.ச., பிரிவுகள் 269, 270 மற்றும் 304 உ/இ பிரிவு 120-பி-இன் கீழ் ஒரு தனி நபர் புகார் ஒன்றை 27 ஏப்ரல் 2021 அன்று தாக்கல் செய்தார். சென்னை உயர் நீதிமன்றம் 2021 ஏப்ரல் 26 தேதியிடப்பட்ட ஆணையை இந்தப் புகாரில் குறிப்பிடப்படவில்லை.

9. பெரும்பரப்புத் தொற்றுநோயின் காரணமாக வாக்குப்பதிவு செயல்முறைகளை நிருவகிப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளையும், வழங்கப்பட்ட உத்தரவையும் விவரித்து சென்னை உயர் நீதிமன்றம் முன்பு தேர்தல் ஆணையம் எதிருரை-உறுதிமொழியை தாக்கல் செய்தது. மேலும், தே.ஆ. பல்வகை மனுவையும்[9] பின்வரும் பரிகாரத்திற்காக தாக்கல் செய்தது:

" [...]

29. ... இந்த மாண்பமை நீதிமன்றம் நீ.பே.ம. எண் 10441/2021-இன் தற்போதைய நடவடிக்கைகளின் பதிவுருக்களில் பகுதியாக அமைவதை மட்டும் பத்திரிக்கை மற்றும் மின்னனு ஊடகத்தில் அறிவிக்கவேண்டும் என்றும் ஊடக நிறுவனங்களுக்கு அவசியமான தெளிவுரைகளை வழங்குவதற்கான குறிப்பிட்ட கட்டளைகளை இது தொடர்பாக வழங்கிட ஒரு இடைக்கால ஏவுரைக்கான உத்தரவை பிறப்பித்தும் நீதி பரிபாலித்து திருப்தியடையலாம்.

30. இந்த சூழமைவுகளில், நீ.பே.ம. எண் 10441/2021 தொடர்பாக இந்த மாண்பமை நீதிமன்றத்தை சாட்டத்தக்க வாய்மொழி கருத்துரைகளின் ஊடக

.....

9. நீ.பே.ப.ம. எண் 12062 & 12065/2020

அறிவிப்புகளின் அடிப்படையில் கொலைக் குற்றத்திற்கான மு.த.அ./புகார் எதுவும் காவல்துறை அதிகாரிகள் பதிவுசெய்யக்கூடாது என்ற ஏவுரையை இடைக்கால கட்டளைக்கான உத்தரவாக பிறப்பித்து இந்த மாண்பமை நீதிமன்றம் திருப்தியடையவேண்டும் என வேண்டுரைக்கிறோம்."

(வலியுறுத்தப்பட்டது)

10. கரூர் சட்டமன்றத் தொகுதி *135*-இல் குறிப்பாக, *2* மே *2021* அன்று வாக்குகள் எண்ணிக்கையின்போது கோவிட்-*19* நடத்தை விதிகளைக் கடைப்பிடிப்பதற்காக தேர்தல் ஆணையத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்-பொருட்டு, இந்த மனுவை உயர் நீதிமன்றம் தீர்வு செய்யும்போது, *30* ஏப்ரல் *2021* அன்று சென்னை உயர் நீதிமன்றத்தால் மீண்டும் இவ்விடயம் கேட்டறியப்பட்டது. இந்த ஆணையின் நிமித்தமாக இந்த பல்வகை மனுவுங்கூட முடித்துவைக்கப்பட்டது.

11. 30 ஏப்ரல் *2021* ஆணையால் மனக்குறையுற்று இந்நீதிமன்றத்தை தேர்தல் ஆணையம் நாடியுள்ளது. மனக்குறையானது என்னவென்றால் அதனுடை பல்வகை மனு நற்கூறுகளின்மீது மதிப்பிடப்படவில்லை என்றும், மேலும், முந்தைய கேட்பு நடவடிக்கையின்போது செய்யப்பட்ட வாய்மொழி கருத்துரைகளை பேரூரைக்கப்படவில்லை என்பது தொடர்பானதாகும்.

ஆ) உச்ச நீதிமன்றம் முன்பான நடவடிக்கைகள்

12. இந்நீதிமன்றம் முன்பு, *30* ஏப்ரல் *2021* தேதியிடப்பட்ட ஆணையை தேர்தல் ஆணையம் எதிர்த்துரைத்தது. முந்தைய ஆணையை எதிர்த்துரைப்பதற்கென்று திருத்தம் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட

வழக்கிடை விண்ணப்பம் ஒன்று தற்போது இறுதி ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிவாரணத்தின் வாயிலாக, *30* ஏப்ரல் *2021* தேதியிடப்பட்ட ஆணையின்பேரில் நிறுத்தம் செய்ய கோரப்பட்டது. மேலும் இடைக்கால கட்டளையாக பின்வரும் பரிகாரம் கோரப்பட்டுள்ளது:

"ஆ) கொல்கத்தா, கர்தா காவல் நிலைய பொறுப்பு அதிகாரி முன்பாக ஸ்ரீமதி நந்திதா சின்உறாவால் தாக்கல் செய்யப்பட்ட 27.4.2021 தேதியிடப்பட்ட புகார் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்தின் ஊழியர்களுக்கு எதிராக வலுக்கட்டாயமான நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கட்டளையிடப்படுகிறது. (இணைப்பு-பி/19 இங்குள்ளது)" (வலியுறுத்தப்பட்டது)

13. தேர்தல் ஆணையத்தின் சார்பாக, திரு. அமித் ஷர்மா உடன் ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. இராகேஷ் திவேதி பின்வரும் வாதிடல்களை வலியுறுத்தினார்:

(i) தேர்தல் ஆணையம் "கோவிட்-*19* இரண்டாம் அலை ஏற்படுவதற்கு தனிப்பட்டமுறையில் பதில் சொல்ல கடமைப்பட்டது" என்றும், மேலும், தேர்தல் ஆணையம் "கொலைக் குற்றச்சாட்டுகளுக்கு ஆட்படவேண்டும்" என்று மதிப்பு குறைவான கருத்துரைகளை வாய்மொழியாக உயர் நீதிமன்றம் செய்திருக்க வேண்டியதில்லை:

அ) கரூர் சட்டமன்றத் தொகுதி *135*-இல் கோவிட்-*19* நெறிமுறைகளுடன் ஒவ்வுதலாக பாதுகாப்புடன் வாக்குகளை எண்ணுவதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பாக இப்படிப்பட்ட

கருத்துரைகள் உயர் நீதிமன்றம் முன்பான விவகாரத்தின் தன்மையுடன் எந்தத் தொடர்புடைமையும் கொண்டிருக்கவில்லை;

ஆ) வாக்குப்பதிவு ஏற்கெனவே முழுமையாக நடைபெற்றுவிட்டது. மேலும், வாக்குகளின் எண்ணிக்கை மட்டுமே 2 மே 2021 அன்று எஞ்சியுள்ளது;

இ) கோவிட்-19 நெறிமுறைகளை பின்பற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரிப்பதற்காக தேர்தல் ஆணையத்திற்கு ஒரு வாய்ப்பினை வழங்காமல் இம்மாதிரியான கருத்துரைகள் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், வாய்தாவின்போது அதனுடைய தேர்தல் நடத்தும் முறைகள் கவனத்தில் ஈர்க்கப்படும் என்று அறிந்திடவில்லை;

ஈ) அத்தாட்சி மற்றும் ஆதாரம் இல்லாமல் வாய்மொழியாக மதிப்பு குறைவான கருத்துரைகளை உயர் நீதிமன்றம் செய்திருக்கிறது;

உ) தேர்தல் ஆணையத்தால் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுவைக் குறிப்பிடாமல் நீதிப்பேராணை மனுவை உயர் நீதிமன்றம் தீர்வு செய்தது;

(ii) உயர் நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கருத்துரைகள் ஊடகங்களில் பரவலாக வெளியிடப்பட்டதால், ஒரு தனிப்பட்ட அரசமைப்பு அதிகாரியான தேர்தல் ஆணையத்தின் தோற்றத்தில் கறைபடிந்துவிட்டது. இந்தக் குறிப்புரைகள் தேர்தல் ஆணையத்தின்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக்

குறைத்துவிட்டது என்றும் அதனுடைய அரசமைப்பு அதிகாரத்தின் புனிதப் பண்புக்கு மறைகேடு செய்துள்ளது;

(iii) தேர்தல் நடத்தும் முறைகள் தொடர்பான விடயங்களில் தேர்தல் ஆணையத்தின்மேல் நீதிமன்ற மீள்பார்வையின் அளாவுகை வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, மற்றொரு கைதேர்ந்த அரசமைப்பு அதிகாரியின் செயற்களத்திற்குள் வந்தடைகின்ற தேர்தல் செயல்முறைகள் அல்லது தேர்தல் ஆணையம் பற்றி குறிப்புரைகள் செய்யுங்கால் கட்டுப்பாடுகளை நீதிமன்றங்கள் செயலுறுத்தவேண்டும்;

(iv) இந்தத் தேர்தல் ஆணையம் கடுமையான நோய்த் தொற்றின்போது பல்வேறு மாநிலங்களில் தேர்தல்களை நடத்தியுள்ளது. மேலும், கோவிட்-*19* தொடர்பான நெறிமுறைகளை அமல்படுத்துவதற்கான போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அடிப்படையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நெறிமுறைகளை உள்ளபடியாக அமல்படுத்துவது என்பது மாநில இயந்திர அமைப்பின் கைகளில் உள்ளது. தேர்தல் சமயத்தின்போதுகூட மாநிலங்களின் ஆளுகையை தேர்தல் ஆணையம் எடுத்துக்கொள்ளவில்லை. மேலும், அதன் பொறுப்புத் தீர்வில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை குறைவானதாகும்;

(v) தமிழ்நாட்டில் தேர்தல்கள் நடத்தவேண்டுமென்ற முடிவினை பிப்ரவரி *2021*-இல் எடுத்தபோதும், பிரச்சாரத்தின்போதும் *(*ஏப்ரல் *4, 2021* அன்று முடிவுற்றது*)* கோவிட்-*19* வழக்குகளின் எண்ணிக்கை கட்டுப்பாட்டில் இருந்தது. எனவே தேர்தலானது வழக்குகளின் அலையெழுச்சிக்கான

குறிப்பிடத்தக்க காரணக்கூறு அல்ல என்று விவரக்குறிப்பின் ஒரு பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகிறது. மகாராஷ்டிரா, தில்லி மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெறாதபோதும் வழக்குகளில் கடமையான அலையெழுச்சியைச் சந்தித்தது;

(vi) தேர்தல் ஆணையம் கடுமையான நோய்த்தொற்றின்போது பிரச்சாரத்திற்கான போதிய வழிகாட்டுதல்களை வனைந்தது, மேலும் அரசியல் தேர்தல்களின் ஈடுபாட்டின் அளாவுகையை கட்டுப்படுத்தியது;

(vii) வாய்மொழி கேட்பு நடவடிக்கைகளின்போது, எழுத்துப்பூர்வமான நீதித்துறை பதிவுருக்களின் பகுதியாக அல்லாத உயர் நீதிமன்றத்தின் கருத்துரைகள் தேர்தல் ஆணையத்திற்கு மட்டுமிஞ்சிய பாதகத்தை ஏற்படுத்தியுள்ளது;

(viii) நீதிமன்ற நடவடிக்கைகளை வழுவாமல் அறிவிப்பதை ஊடகங்கள் உறுதிசெய்யவேண்டும், மேலும், நடவடிக்கைகள் மக்களின் நம்பிக்கையை இழப்பதற்கு வழிகோலுகின்ற மனவெழுச்சியைத் தூண்டுவதுபோல இருக்கக்கூடாது. நீதிமன்ற நடவடிக்கைகளை அறிவிக்கின்ற முறையில் ஏவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வனையப்படவேண்டும்;

ix) நீதிமன்ற விசாரணைகள் நடத்துவதிலும் மற்றும் ஊடகங்களின் சுதந்திரத்திற்கும் இடையில் ஒரு சமநிலையைப் பராமரிக்கவேண்டும். ஒரு நபர் அல்லது அலுவலரின்மீது ஒரு நீதிமன்றம் ஒதுக்கித் தள்ளப்பட்ட அவதூறுகளைக் கொண்டுள்ளது என்ற ஊடக அறிவிப்பு தவறானதாகும்;

x) ஒரு நீதிமன்றத்தின் கருத்துகள் அதன் தீர்ப்புரைகளின் வழியாகத் தெரிவித்திருந்தபோதிலும், நீதிபதிகளின் வாய்மொழியான குறிப்புரைகளை முக்கியமான ஊடகங்களில் மேற்கோளாகக் காட்டுவது ஒரு அமைப்பாக வகுக்கப்பட்ட நம்பிக்கை குறித்த எண்ணப் பதிவை வழங்கிவிடும். இது நீதிசார்ந்த நடைமுறை வரம்பின் எல்லைகளை மிஞ்சுவதாகும்.

14. இந்த வாதிடல்களை எதிர்த்து, முன்னெச்சரிக்கை எதிர்வாதியின் சார்பாக ஆஜரான திரு. பிரதீப் கமார் யாதவ், தேர்தல் சமயத்தின்போது மாநிலங்களில் தேர்தல் ஆணையம் பொதுக்கட்டளைகள் பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதிசெய்து, துணைப்படையை விரிவுறுத்துவது, மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள், காவல்துறை தலைமை இயக்குநரையுங்கூட பணியிடை நீக்கம் செய்யவும் அல்லது மாற்றியமைப்பதற்கான அதிகாரம் உள்ளடங்கலாக, மிகுதியான அதிகாரங்களை தேர்தல் ஆணையம் துய்த்து மகிழ்கிறது என்னும் சங்கதியை வலியுறுத்தினார். எனவே, தேர்தல்களின்போது கோவிட்-*19* தொடர்பான நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பான நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தேர்தல் ஆணையத்தின் பொறுப்பாகும்.

15. இவ்வழக்கில் எழுப்பப்பட்ட தொலைநோக்கு பிரச்சினைகளிலிருந்து வழக்குரைஞரின் வாதிடல்களை நாம் இப்போது ஆராய்ந்து பார்க்கலாம்.

இ) சட்டநிலை மற்றும் தேர்ந்தாராய்தல்

16. இந்நீதிமன்றம் முன்பு, கேட்பு நடவடிக்கைகளின்போது உயர் நீதிமன்றத்தின் வாய்மொழியான குறிப்புரைகளாலும், மேலும் அதனுடைய

பல்வகை மனுவின் தகுதிப்பாடுகளை எடுத்துரைக்காமல் போனதும் தேர்தல் ஆணையத்தின் மனக்குறையாகும். அதனுடைய பல்வகை மனுவில், (i) சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதித்துறைப் பதிவுருக்களில் பகுதியாக அமைந்ததென்னவோ அதைத்தான் ஊடகங்கள் அறிவித்தது என்னும் நீதிபதிகளின் வாய்மொழியான கருத்துரைகள் அல்ல. மேலும் (ii) கொல்கத்தா, கர்தா காவல் நிலையம் முன்பு தாக்கல் செய்யப்பட்ட புகாரின்பேரில் தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகளுக்கு எதிராக வலுக்கட்டாயமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கக்கூடாதென்று ஒரு கட்டளையை தேர்தல் ஆணையம் கோரியுள்ளது.

17. தொடக்கத்தில், மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாம் வேண்டுரையை முற்றிலும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். கொல்கத்தாவில் ஒரு மு.த.அ. பதிவு செய்யப்படும்பொருட்டு, மனக்குறையுற்ற நபர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973-இன் கீழான பரிகாரங்களை நாடக்கூடும். சட்டத்தின் கீழான பரிகாரங்கள் உட்பட குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 பிரிவு 482-இன் கீழ் செல்லாததாக்குவதை மட்டுப்படுத்தவில்லை. உயர் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்வதற்கு சாத்தியமில்லாத தவறாகக் கருதப்பட்ட தொடர் நடவடிக்கையை தேர்வு செய்யும்பொருட்டு இந்த தேர்தல் ஆணையத்திற்கு மனக்குறை இருந்திருக்காது.

18. நீதிமன்ற நடவடிக்கைகளை அறிவிப்பதிலிருந்து ஊடகத்தை தடைசெய்யக்கோரி - தேர்தல் ஆணையம் எழுப்பியுள்ள முதல் வேண்டுரையாக இருக்கின்ற இந்த விடயத்தின் முக்கிய பகுதியை நாம் இப்போது அணுகுவோம்.

நீதிமுறை அலுவல் பற்றிய பதிவுருக்களில் பகுதியாக அமைகின்றனவற்றை அறிவிப்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதே இம்மனுவின் அடிப்படையாகும். தேர்தல் ஆணையத்தின் இந்த வேண்டுரை அரசமைப்பின் கீழ் உறுதியுரைக்கப்பட்ட இரண்டு அடிப்படைக் கோட்பாடுளை கவர்கின்றது - திறந்தவெளி நீதிமன்ற நடவடிக்கைள், பேச்சு மற்றும் சிந்தனை வெளியீட்டு சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமை.

இ.1. திறந்த நீதிமன்றங்கள் மற்றும் இந்திய நீதித்துறை

19. திறந்த நீதிமன்றங்கள் மற்றும் இந்திய நீதித்துறை நீதிமன்றங்கள் வெளிப்படையாகவும் மற்றும் குறிப்பாகவும் இவ்விரண்டு அர்த்தத்தில் திறந்திருக்கவேண்டும். தனி அறை நடவடிக்கைகள் நீங்கலாக ஒரு திருமண தனியுறை நிலை கொண்ட விடயங்களின்பேரிலான திருமணவியல் நடவடிக்கைகள் அல்லது சிறுவர் பாலியல் பலாத்காரம் போன்ற வழக்குகளை உள்ளடக்கும், தனியறை நடவடிக்கைகளுக்கான ஒரு விதிவிலக்குடைய வழக்குகளின் வகைப்பாடுகளைத் தவிர, மதிப்புடை அரசமைப்பு சுதந்திரங்கள் பாதுகாக்க நீதிமன்றங்களை வெளிப்படையாக அணுகுவது அவசியமானது என்ற கோட்பாட்டின்மீது கண்டறியப்பட்டதே நமது சட்ட அமைப்பு ஆகும். நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் பொது அதிகார எல்லைக்குள் கிடைக்கவேண்டுமென ஒரு வெளிப்படையான நீதிமன்றத்தின் கருத்துப் படிவம் வேண்டுறுத்துகிறது. நீதிசார்ந்த நடவடிக்கைகளின்போது வெளிப்படுவது என்ன என்பது பற்றி தெரிந்துகொள்ளும் உரிமை குடிமக்களுக்கு இருக்கிறது. நீதிமுறை நடவடிக்கைகள் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நீதிமன்றத்தின்

உரையாடல்கள் சுட்டிக்காட்டுகிறது. வெளிப்படையான கருத்து பரிமாற்றங்களின் மீது வாய்மொழியான விவாதங்கள் முன்வைக்கப்படுகிறது. அதுபோன்ற ஒரு பரிமாற்றத்தின்வாயிலாக சட்டப்படியான வாதுரைகள் தேர்வு செய்து ஆராயப்பட்டது. இந்நீதிமன்றத்தின் முன்பு எடுத்துரைக்கப்பட்ட விவாதங்கள், எதிர்த்தரப்பு வழக்குரைஞரின் மறுமொழிகள் மற்றும் நீதிமன்றத்தால் எழுப்பப்பட்ட எழுவினாக்கள் போன்ற விடயங்களை அறிந்துகொள்வதற்கான சட்டப்படியான உரிமைகள் குடிமக்களுக்கு இருக்கிறது. நீதிமுறை செயல்முறைகள் பொதுமக்களின் ஆய்விற்கு உட்பட்டது என்பதை ஒரு திறந்த நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் உறுதிசெய்கிறது. வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையைப் பேணிக்காப்பதற்கு பொது மக்களின் ஆய்வு மிக முக்கியம் வாய்ந்ததாகும். மக்களாட்சி நிறுவனங்களை இயக்குவதிலுள்ள வெளிப்படைத்தன்மை மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை நிலைநாட்டுவதற்கு முக்கியமானதாகும். மொஉறமத் **ஷஉறாபுதீன் -எதிர்- ஸ்டேட் ஆ∴ப் பீகார்**[10]-இல் கவனிக்கப்பட்ட ஒருங்கியல்வான கருத்துரைகள்:

> "....ஊடகங்கள் முன்னிலையாகியிருந்தாலுங்கூட, பொதுமக்களில் தனிப்பட்ட உறுப்பினர்கள் அனுமதி மறுக்கப்படுவாராயின், திறந்த நீதிமன்றங்களில் நடவடிக்கைகள் செல்வதாக கருதமுடியாது. .... ஒரு திறந்த நீதிமன்றம் என்பது பொதுமக்கள் அனுமதிக்கப்படும் உரிமையுள்ள நீதிமன்றமாகும். மேலும் நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெறுவதை உற்று கவனிப்பதற்கு நீதிமன்றத்தில் நுழைய விரும்பும் அனைத்து நபர்களுக்கும் நீதிமன்றத்தில்

.....

10. (2010) 4 எஸ்.சி.சி. 653

நுழைய விரும்பும் அனைத்து நபர்களுக்கும் நீதிமன்றத்தில் அணுகல் வழங்கப்படுகிறது."

20. மக்களாட்சி தொடர்ந்து செயல்படுவதற்கு திறந்த நீதிமன்ற அமைப்புகளின் பங்களிப்பு பலவிதமான வழிகளில் இருக்கிறது. நீதிபதிகள் சட்டத்திற்கிணங்கவும் மற்றும் நேர்மையுடனும் செயலாற்றுவதை ஒரு திறந்த நீதிமன்ற அமைப்புமுறை உறுதிசெய்கிறது. **ஆர் -எதிர்- சோஷியலிஸ்ட் வொர்கர்ஸ் பிரிண்டர்ஸ், எக்ஸ் பி. அடார்னிஜெனரல்**[11]-இல் லார்ட் விட்ஜெரியின் குறிப்புரைகள் நீதிபதியின் வழிகாட்டுதலின்பேரில் வெளிப்படையான விசாரணைகளின் பங்கினை பின்வரும் வாசகங்களின்படி தொகுத்துரைக்கப்படுகிறது:

"பொதுமக்களை கொண்டுள்ள நீதிமன்றங்களின் ஒழுங்குமுறைகள் பொதுமக்களின் முன்னிலையில் நீதிமன்றத்தின் மேலே தாமாகவே விதித்துக்கொள்ளும் சிறந்த பண்பாகும். பொதுமக்களில் அக்கறையுள்ள நபர்களை முழுமையாக நீதிமன்றம் கொண்டிருக்கும்போது ... எல்லோரும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது குறித்து மிகவும் எச்சரிக்கையாய் இருக்கின்றனர் என்றும், ஒவ்வொருவரும் சற்றே கடுமையாக முயற்சிக்கின்றனர், எனவே பொதுமக்கள் அல்லது ஊடகங்களின் முக்கியமான உறுப்பினர்கள் அங்கு முன்னிலையாகவில்லையெனில், நீதிமன்றங்களில் அங்கு ஒழுங்குமுறைகளின் பலாபலன் முற்றிலுமாக குறைபடக்கூடும். தனி அறை

.....

11. (1974) 3 டபிள்யூ.எல்.ஆர். 801

விசாரணைக்கான உத்தரவை ஒருவர் கொண்டிருக்கும்போது, பொதுமக்கள் மற்றும் ஊடகங்கள் அனைவரும் தட்டிக்கொண்டு போகும் திடீர் ஒற்றைச் செயலால் வெளியேற்றப்படுவர், மேலும் பொதுமக்களினுடைய மேற்பார்வை முழுவதுமாக இல்லாமற்போய்விடும்."

21. இந்தச் செயல்முறையின் நம்பிக்கை பொதுமக்களின் ஆய்விற்கு துணைசெய்கிறது. பொதுவான விவாதங்கள் மற்றும் திறனாய்வுகள் நீதிபதியின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதுபோன்று செயல்படும். **நரேஷ் ஸ்ரீதர் மிராஜ்கர் -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு**[12] என்ற வழக்கில் தனது மாறுபட்ட கருத்துரையில், நீதியரசர் எம். உறிதயதுல்லா (அப்போதைய கற்றறிந்த தலைமை நீதிபதி) நீதிசார்ந்த நடவடிக்கைகளை பொது மதிப்பாய்விற்கு எப்படி ஒரு திறந்த நீதிமன்றம் வழிவகுக்கிறது என்பதை உற்றுநோக்கியது:

"129. [...] திறந்த நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிப்பது என்பது பாரபட்சமற்ற நீதி நிர்வாகத்தில் உள்ள பொதுமக்களின் நம்பிக்கையை பராமரிப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவை நீதிசார்ந்த இயக்குமுறை அத்துடன் வாதிடும் தரப்பினர்கள் மற்றும் அவர்களுடைய சாட்சிகளின் நடத்தையின் மேலே ஒரு முழுநிறைவான சரிபார்ப்பு போன்று இயங்குகிறது."

22. நீதிமன்றத்தின் முன்பான வழக்குகள் சட்டமன்றம் மற்றும் நிருவாகத்துறையின்[13] நடவடிக்கைகள் குறித்த பொது தகவல்களுக்கான மிக

.....

12. (1966) 3 எஸ்.சி.ஆர். 744, இதன்பின்னர் "மிர்ஜாக்கர்" என்றே குறிப்பிடப்படும்.

13. கன்லி.ப் எம்மா, "ஓபன் ஜஸ்டிஸ்: கான்செப்ட்ஸ் அண்டு ஜூடிஷியல் அப்ரோச்சஸ்" (2012) 40 .பெட்.எல். ரெவ் 385.

முக்கியமான ஆதாரமாகும். ஒரு திறந்த நீதிமன்றம் கல்வி பற்றிய நோக்கங்களுக்காகவும் பயன்படுகிறது. சட்டத்தின் நடைமுறை பயன்பாடு அவர்களின் உரிமைகள்மீது எப்படி தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று குடிமக்கள் அறிவதற்கான தளமேடையாக நீதிமன்றம் ஆகிவிடுகிறது. **ஸ்வப்னில் திரிபாதி -எதிர்- இந்திய உச்ச நீதிமன்றம்**[14]-இல் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒன்று நீதித்துறை நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்புவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. எங்களில் ஒருவரான (நீதியரசர் டி.ஒய். சந்திரசூட்) என்பவர் ஒத்துப்பார்க்கும் தகவு நோக்கிலிருந்த முற்கோளினை பகுப்பாய்ந்தார்:

> "82. [...] இவ்வகையான நீதிய தீர்முடிவுகளின் வாயிலாக, நீதிவழங்கும் செயல்முறைகளை காண்பதற்கு பொதுமக்களை அனுமதிப்பதற்கு வழிவகை செய்கின்ற திறந்த நீதிமன்ற அறைகளின் முக்கியத்துவத்தை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்களுக்கு இடையிலான உரையாடல்களை நேரடியாகக் காணவும் மற்றும் நீதிமுறை செயல்பாடுகள் குறித்து ஒரு கேட்டுணர்ந்த தகவல்களை ஏற்படுத்தவும் பொதுமக்கள் மற்றும் வழக்காடிகளை நீதிமன்ற வாய்தாக்களுக்கான முதற்படி நுழைவுரிமை இயல்விக்கிறது.
>
> 83. சமுதாயத்தின் பெரிய பிரிவினருக்கு நீதிமன்ற நடவடிக்கைகளை கவனிப்பதற்கான வாய்ப்பு அரிதானது என்ற சங்கதியால் நமது

.....

14. (2018) 10 எஸ்.சி.சி. 639, இதில் இதற்குப் பிறகு "ஸ்வப்னி திரிபாதி" எனக் குறிப்பிடப்படும்.

நாட்டினுடைய திறந்த நீதிமன்றங்களின் தாக்கங்கள் குறைந்துவிட்டது. இதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை பெறாமலிருப்பதும் மற்றும் வறுமை, கல்வியின்மை, செலவுத்தொகை, பழகாது ஒதுங்கி நடக்கும் பண்பு ஆகியவை காரணமாகும். வழக்கு நடவடிக்கைகளின்போது என்ன நிகழ்கிறது என்பது பற்றி வழக்கறிஞர்களால் தருவிக்கப்படும் தகவல்களின்மீதே வழக்காடிகள் சார்ந்துள்ளனர். **மற்றவர்கள் வழக்குகளில் தனிப்பட்ட முறையில் ஈடுபடாமலிருப்பவர்கள், நீதிசார்ந்த தீர்முடிவுகள் குறித்து செய்தித்தாள்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் வழங்கும் தகவல்களின் மீதே சார்ந்துள்ளனர். வழக்குகளின் விவரங்கள் சரியாகவும் மற்றும் விரிவானதாகவும் இருக்கின்றபோ, வெளிப்படையான நீதிக்கு காரணமாக அமைகிறது. எனினும் ஒரு நீதிமன்ற கேட்பு அறிக்கை தவறானதாக இருக்குமாயின், பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் உரிமையை அது தாமதப்படுத்துகிறது. நீதிமன்றங்கள், சட்டத்தினாலும் மற்றும் பொருண்மையினாலும் வெளிப்படையாக இருந்தபோதிலும், தனிப்பட்ட குடிமக்களின் வாழ்விலிருந்து மிகவும் ஒவ்வாதநிலையில் விலகிச்சென்றதாகிவிடுகிறது. இது ஒழுங்குமீறியதாகும்.** ஏனெனில், அவர்களுக்கு நீதி வழங்குவதற்காகவே நீதிமன்றங்கள் முதன்மையாக நீடித்துவருகிறது." *(வலியுறுத்தப்பட்டது)*

23. எவ்வாறாயினும், இந்தியாவிலுள்ள திறந்த நீதிமன்றங்களின் விதிகளுக்கு சில விலக்களிப்புகள் உள்ளது. மேற்கண்ட **மிரஜ்கர்**-இல் தலைமை நீதிபதி பி.பி. கஜேந்திரகட்கர்:

> *"21. ...* பொதுவான விசாரணையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகையில், நீதித்துறையின் முதன்மையான கடமையானது வழக்குகளை தனது முன்பாகக் கொண்டுவரும் தரப்பினர்களுக்கிடையில் நீதி வழங்குவது என்னும் சங்கதியை எங்களால் புறக்கணிக்கமுடியாது. ஒரு வழக்கினை விசாரிக்கும் நீதிபதி வழக்கிலுள்ள உண்மையை மிகையாகக் கண்டறியும் நோக்கம் தாமதமாகக்கூடுமென்றோ அல்லது பொதுமக்களின் கருத்தூன்றிய பார்வைக்குட்பட்டு சாட்சியம் வழங்கும்படி சாட்சிகள் வேண்டுறுத்தப்படும்பொருட்டு தோல்வியுறவுங்கூடும் என்று நீதிபதி மனநிறைவுற்றால், பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தனி அறை விசாரணை நடத்துவதற்கான அவருடைய இயல்பான அதிகாரத்தைச் செயற்படுத்த வேண்டுமா அல்லது கூடாதா என்பது அவரைச் சார்ந்ததாகும். தன் முன்பாகக் கொண்டுவரப்படும் வழக்குகளில் நீதி வழங்குவதே நீதிமன்றத்தின் முதன்மையான கடமையாக இருக்கும்பொருட்டு, அப்போது நெறிமுறையின்படி, திறந்த நீதிமன்றத்தில் தான் அனைத்து வழக்குகளும் விசாரிக்கப்படவேண்டும் என்ற விதிக்கு எந்த விலக்களிப்பும் இருக்கமுடியாது என்ற கோட்பாட்டினை முன்வந்து ஏற்றுக்கொள்வது என்பது கடினமானதாகும். நீதிமன்றங்கள் முன்பு அனைத்து விசாரணைகளும் வெளிப்படையாக நடத்தவேண்டுமென்ற

நெறிமுறையின்படி வளையாததாகவும் மற்றும் எல்லாவற்றிற்கும் பொருந்துகிறதாகவும் கருதப்படுமாயின், விதிவிலக்குகள் எதுவேயாயினும் அதனை அனுமதிப்பதற்கில்லை என்று தீர்மானித்தால், நீதி தன்னாலேயே தோல்வியுறும் என்ற கொள்கையை பின்பற்றக்கூடிய வழக்குகள் தோன்றும். அதனால்தானோ என்னவோ அத்தகைய முறையைப் பின்பற்ற வேண்டுறுத்தி நீதியின் நோக்கம் தெளிவாகவும் மற்றும் அவசியமானதாகவும் இருக்குமாயின் தனி அறை விசாரணையை நடத்துவதில் உயர் நீதிமன்றத்திற்கு இயல்பான அதிகார வரம்பு உள்ளதென தீர்மானிப்பதில் எங்களுக்குத் தயக்கமில்லை, இந்த இயல்பான அதிகார வரம்பினை மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்கான அவசியம் குறைவானதாகும். எனவே, ஒரு வழக்கினை திறந்த நீதிமன்றத்தில் விசாரிக்கும்பொருட்டு நீதியின் குறிக்கோள் தாமாகவே தோல்வியுறக்கூடும் என்று சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நீதிமன்றம் திருப்தியடைந்துவிட்டால், விசாரணையை தனியறையில் நடத்துவதற்கான ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம்."

எனவே, நேர்மையான விசாரணை மற்றும் மறைவுரிமை போன்ற சரிசம மதிப்புடையதாயிருக்கும் நலன்களைப் பாதுகாப்பதற்கு சில விதிவிலக்கான வழக்குகளில் தனியறை நடவடிக்கைகள் அவசியமானதாக இருக்குமெனில், எடுத்துக்காட்டாக, பாலியல் வன்கொடுமை வழக்குகளில்

நீதிமன்ற செயல்முறைகளின் பொது ஆய்வு மக்களாட்சி இயங்குவதற்கான முக்கியமான நெறிமுறையாக இருந்து வருகிறது.

இ.2. ஊடகங்களின் சிந்தனை வெளியீட்டுச் சுதந்திரம்

24. அரசமைப்பின் உறுப்புக்கூறு 19 (1) (அ) ஒவ்வொரு குடிமகனுக்கும் பேச்சு மற்றும் சிந்தனை வெளியீட்டு சுதந்திரத்திற்கு உத்தரவாதமளிக்கிறது. அறுபது ஆண்டுகளுக்கும் முன்னர், 1958-இல் இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு, **எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் (பி) லிமிடெட் -எதிர்- யூனியன் ஆ.:ப் இந்தியாவில்**[15], உள்ளடக்கமாக, பத்திரிக்கையின் சுதந்திர உரிமையை உறுப்புக்கூறு 19 (1) (அ)-க்குள்ளாக எடுத்துச் செல்கிறது என்பதை விளக்குகிறது. நீதிமன்றம் தீர்மானித்தது:

> "**அனைத்து சுதந்திரங்கள் போல, பத்திரிக்கை சுதந்திரம் என்பது சுதந்திரத்திலிருந்தும் மற்றும் சுதந்திரத்திற்காகவும் என்று பொருள்படும். ஒரு சுதந்திரமான பத்திரிகை என்பது உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் அரசாங்கம் அல்லது சமூகம், எதுவேயான வழிவகைகளிலிருந்தும், கட்டாயங்களிலிருந்தும் சுதந்திரமாக இருப்பதாகும். கட்டாயங்களிலிருந்தும், நெருக்கடிகளிலிருந்தும் அல்ல, முயற்சி செய்யும் ஆற்றல் மற்றும் நம்பிக்கைகள் இல்லாத இறக்கும் தருவாயிலுள்ள சமூகத்தைத் தவிர நெருக்கடியிலிருந்து சுதந்திரமாக எந்த பத்திரிக்கையும் இல்லை.** எவ்வாறாயினும், நிதியியல், எழுத்தாயரைச் சார்ந்த, பொதுமக்கள் சார்ந்ததைப்போல, இம்மாதிரியான அழுத்தங்கள் உறுதியாகவும்

.....

15. 1959 எஸ்.சி.ஆர். 12

மற்றும் திரித்துக் கூறப்படுமாயின், அமைப்பாக வகுக்கப்பட்ட தொல்லைகள் போன்று ஆகிவிடும் - அணுகுமுறை கட்டாயமானதாகும்; சுதந்திர செயல்விளைவிலிருந்து அப்போது தொலைந்துபோகும் சிலவற்றை மீட்டடைவிக்க பத்திரிக்கை மற்றும் பொதுமக்கள் இணையவேண்டும். ஒரு சுதந்திரமான பத்திரிக்கை என்பது அதனுடைய அனைத்து படிநிலைகளிலும், கருத்துகளையும் வெளியிடுவதற்கான சுதந்திரமாகும். அதனுடைய சொந்த குறிக்கோள்கள் மற்றும் தேவைப்பாடுகளுக்காக இணைகின்ற சமூகமும் மேலும், நடப்பிலுள்ள தொழில்துறை நுட்பங்கள் இதுபோன்ற இலக்குகளை அடைவதற்கான சுதந்திரத்தை சாத்தியமாக்குகிறது. இந்த நோக்கங்களுக்காக, வீட்டிலும் மற்றும் வெளியிலும் உள்ள தகவல்களின் மூல ஆதார ஏடுகளுக்கான இயல்நுட்பக்கூறுகள், நிதியியல் பலம், நியாயமான நுழைவுரிமை மற்றும் தேசிய சந்தைக்கு தகவல்களைக் கொண்டுவருவதற்கான அவசியமான வசதிகள் ஆகியவற்றின்மீது முழுமையான கடப்பாடு கொண்டிருக்கவேண்டும். இம்மாதிரியான தேவைப்பாடுகளின் அளவிற்கு இந்த பத்திரிக்கைத் துறை வளரவேண்டும்." *(வலியுறுத்தப்பட்டது)*

25. நலம்பயக்கும் அனைத்து விடயங்களிலும் சிந்தனைகள் மற்றும் கருத்துரைகளை வெளிப்படுத்துவதற்கும், தகவல் தொரிவிப்பதற்கும், வடிகலத்தை கையாளவும் மற்றும் அறிவிப்பதற்கான சுதந்திரத்திற்கு இந்த அரசியலமைப்பு உத்தரவாதமளிக்கிறது. சிந்தனை வெளியீடு மற்றும் பேச்சு சுதந்திரமானது

உறுப்புக்கூறு *19(2)* ஒழுங்குமுறை வழிவகையங்களுக்குட்பட்டது. **எல்.ஐ.சி. -எதிர்- மனுபாய் டி. ஷா (பேராசிரியர்)**[16]-இன் இந்தத் தீர்முடிவு இதுபோன்ற சிந்தனைகளை வளர்க்கிறது:

> "... இந்த அச்சு ஊடகம், வானொலி மற்றும் சின்னத்திரை பொது கல்வியாளர்கள்போல் ஆரோக்கியமான மக்களாட்சியினுடைய வளர்ச்சிக்கு மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். ஒருவருடைய கருத்துகளை சுதந்திரமாக வெளியிடுவதே மக்களாட்சிக்காக வகுக்கப்பட்ட அனைத்து அமைப்புகளின் போக்குவரத்து நெறியாகும். எனவே, இந்த உண்மையை வாயடைப்பு செய்யவோ அல்லது பிறரறியாமல் வைத்திருக்கவும் பேச முடியாமற் செய்வதற்கான எல்லா முயற்சிகளும் மக்களாட்சிக்கு ஒரு சாவுமணி ஒலித்தது போன்று இருக்கும். மேலும், ஏகாதிபத்தியம் மற்றும் சர்வாதிகாரம் முன்செல்ல உதவிபுரியும். மக்களாட்சியை உணர்ச்சியூட்டுகின்றவகையில் செயற்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க பங்கினை அளித்தும், நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் முன்னேற்றங்களை பொதுமக்களுக்கு தெரிவித்ததின் வாயிலாக தற்காலத்திய அறிவிப்பு செயற்கருவிகளின் வழிவகைகள் பொதுநலனை மேம்படுத்தியுள்ளது என்பதை மறுத்துப் பேசமுடியாது. ஆதலால் ஏதேனும் அமைப்பினில், அதுவும் நமது ஜனநாயக அமைப்பு போன்றவற்றில் குறிப்பாக, செய்திகளைப் பரப்புதல் மற்றும் பொதுமக்களின் வரவேற்றுப்புக்கான கருத்துகள் முக்கியமானதாகும். எனவே, உறுப்புக்கூறு *19(2)*-னுடைய ஊறுபாட்டிற்குள்ளாக வந்தடைந்தாலன்றி முன்கூறப்பட்டதை மறுப்பதற்கான

.....

16. (1992) 3 எஸ்.சி.சி. 637

அனைத்து முயற்சிகளின் மேலே சினக்குறிப்பு காட்டக்கூடும். ஒரு குடிமகன் அவள் அல்லது அவருடைய சிந்தனைகளை பிரகடனம் செய்வதற்காகவும், அவருடைய கருத்துகளை பரப்புவதற்காக பருவ இதழ் சுவடிகள், நாளேடுகள் மற்றும் பத்திரிக்கைகளில் அல்லது மின்னணு ஊடகங்களின் வாயிலாகவும் பிரசுரிப்பதற்கான உரிமையைப் பின்பற்றுகிறது, ஏனெனில், இம்மாதிரியான தொலைத்தொடர்பு அலைவரிசைகள் வாசிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் மனதில் செய்திகள் மற்றும் கருத்துகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்த ஏற்பாடு செய்யும் அலுவலர்கள் என்று நன்கு அறியப்பட்டதகும். மேலும், தேசிய முக்கியத்துவமுடைய இன்றியமையாத விடயங்களில் மக்களின் அபிப்ராயத்தை மாற்றியமைக்கக்கூடியவர் என்பதும் அறிந்ததே." *(வலியுறுத்தப்பட்டது)*

26. நீதித்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் அறிவிப்பதற்கு பேச்சு மற்றும் சிந்தனை வெளியீட்டு சுதந்திரம் நீட்டிக்கின்றது. சட்டத்தின் கீழ் புரிவதற்கான முக்கியமான பணிகளை நீதிமன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குடிமக்களின் உரிமைகள்மீது மட்டுமின்றி, சட்டத்தை அமல்படுத்தும் கடமைப்பொறுப்பிலுள்ள செயலாட்சித்துறையிடமிருந்து மாறாக எந்த அளவிற்கு பொறுப்புடைமையையுங்கூட குடிமக்களால் பிரித்தெடுக்க முடியும் என்ற நேரடி தாக்கத்தை அவர்களின் பணி கொண்டுள்ளது. மனப்போக்கான அதிகாரச் செயலுறுத்தல்களை தடைசெய்யவும், தீர்ப்புக்காக வழக்கு வகையில் அதிகாரிக்கு அனுப்பும் அவர்களுக்கு நீதிமன்றங்கள் உண்மையாக இருப்பதை உறுதிசெய்ய குடிமக்கள் தகுதிவாய்ந்தவர்களாவர். வழக்கு

நடவடிக்கைகளின்போது நீதிமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதுகுறித்து தடையின்றி கிடைக்கக்கூடிய தகவல்கள் அவ்வாறு செய்யும் குடிமக்களின் திறமையுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளது. நடவடிக்கைகள் பற்றி விமர்சிக்கவும், எழுதவும் ஊடகங்களின் சுதந்திரத்தில் முக்கியத்துவம் உள்ளது. இந்தக் கோட்பாட்டினை *ஊடகங்கள் மற்றும் நீதித்துறை சுதந்திரத்தின் இடையேயான உறவின்முறை மீதான மேட்ரிட் நெறிமுறைகளில்*[17] ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த முதல் கோட்பாடு வகுக்கப்பட்டதாவது:

> *"1. மக்களாட்சி என கோருகின்ற ஒவ்வொரு சமுதாயத்தின் இன்றியமையாத அடித்தளங்களில் ஒன்றாக சிந்தனை வெளியீட்டு சுதந்திரம் (ஊடகத்தின் சுதந்திரம் உள்ளடங்கலாக) அமைகிறது. ஏதுமறியாதவர் என்னும் அனுமானத்தை மீறாமல் விசாரணையின்போதும், முன்னரும் மற்றும் பின்னரும் உள்ள வழக்குகள் உள்ளடங்கலாக, நீதி நிர்வாகத்தின்மீது விமர்சிக்கவும் மற்றும் தகவல்களைச் சேகரித்து பின்னர் பொதுமக்களுக்கு தெரிவிப்பது ஊடகங்களின் உரிமை மற்றும் கடமையாகும்."*

தரப்பினர்களுக்கிடையில் நீதி தடம்புரளவில்லை என்பதை உறுதி செய்யும் அவசியங்கொண்டு, சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக, நீதிமன்றங்களுக்கு முன்பாக நடந்துகொண்டிருக்கும் வழக்குகளை அறிவிப்பதற்கு

.....

17. <உெறச்டிடிபிஎஸ்://டபிள்யூடபிள்யூடபிள்யூ.ஐசிஜெ.ஓஆர்ஜி/டபிள்யூபி-கண்டென்ட்/அப்லோட்ஸ்/1994/01/மேட்ரிட்-ப்ரின்சிபல்ஸ்-ஆன்-மீடியா-அண்ட்-ஜூடிசியல்-இண்டிபென்டன்ஸ்-பப்ளிகேஷன்-1994-இங்க்.பிடிஎ.ஃப்> என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறக்கூடிய யூனிசெ.ஃப் ஸ்பேனிஷ் கமிட்டி மற்றும் நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் சுதந்திரத்திற்கான சர்வதேச நீதிய மையக் குழுமத்தினரால் நடத்தப்பட்ட கூட்டத்தில் கூடிய ஊடக பிரதிநிதிகள் மற்றும் 40 சிறப்புவாய்ந்த சட்ட வல்லுநர்கள் கொண்ட குழுவினரால் இந்தக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

ஊடகங்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது என்ற கோட்பாடு இந்திய சட்ட அறிவியலுக்குக்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

27. இத்தனை ஆண்டுகளாக ஊடகங்கள், தேசிய எல்லையைக் கடந்தும் பெருமளவிலான பார்வையாளர்களுக்கு செய்திகள், கருத்துகள் மற்றும் சிந்தனைகளைப் பரப்புவதற்காக பெருந்தொகையிலிருந்த அச்சு வடிவிலான செய்தித்தாள்களிலிருந்து, வானொலி ஒலிபரப்புகள், தொலைக்காட்சி அலைவரிசைகள் மேலும் இப்போது இணையதளங்களுக்கு இடமாறியுள்ளது. இந்த வலைதளம், சமூக ஊடகங்கள் உள்ளடங்கலாக, குறிப்பிடத்தக்க வழிகளில் புதுப்பிக்கப்பட்டு, தகவல் ஒளிபரப்பும் வழிவகைகள் வாயிலாக புரட்சி செய்தது. இந்த இடமாறுதலின் ஒவ்வொரு கட்டத்திலும், நீதிமன்ற செயல்முறைகள் எவ்வாறு மாற்றங்களை எற்றுக்கொள்கிறது என்ற புதிய கேள்விகள் எழுப்பப்பட்டது, ஏனென்றால், நீதிசெயல்முறைகள் மற்றும் நீதிமன்றங்கள் முன்பாக தரப்பினர்களின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது[18]. எனினும், இதுபோன்ற உண்மையான கவலைகள் இருக்கையில், உருவாகிவரும் தொழில்நுட்பங்களுடன் நீதிமன்றங்கள் ஈடுபடாமலிருப்பதற்காக போதுமான நல்ல காரணமாக அவைகள் இருப்பதற்கில்லை. வர்ணனைக்கு அப்பாற்பட்டு, சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் அமைப்புகளை தொழில்நுட்பம் வடிவமைத்துள்ளது. இந்த உலகம் அடிக்கடி கடினமான பட்டியல் வரிசை வேக அளவுள்ள தொழில்நுட்பத்துடன் தழுவிச்செல்கிறது, நமது குடிமக்கள் பலரும் சிறுவயதிலிருந்து விரல் சார்ந்த

.....

18. டேனியல் ஸ்டெப்னியேக், 'டெக்னாலஜி அண்டு பப்ளிக் அசஸ் °ஈ ஆடியோ - விஷ்வல் கவரேஜ் மற்றும் ரெக்கார்டிங்க்ஸ் ஆ.ப் கோர்ட் ப்ரோசிடிங்ஸ் : இம்ப்ளிகேஷன்ஸ் .பார் காமன் லா ஜூரிஸ்டிக்ஷன்ஸ்' *12* வில்லியம் அண்டு மேரி பில் ஆ.ப் ரைட்ஸ் ஜார்னல் *791 (2004)*

பிறப்புரிமையாளராகிவிடுகின்றனர். செய்திகளை வாசிக்கையில், வேண்டுகோள்கள் மற்றும் சமூக ஊடக வலைதளம் போன்ற, நவீன வடிவிலான ஊடகங்களின் திசை நோக்கி அவர்கள் பார்க்கக்கூடும் என்பது அறியக்கூடியதாகும். இது நீதிமன்ற பணிகள் குறித்த தகவல்கள் அறிவிப்பதையுங்கூட உள்ளடக்கும் என்று புரிந்துகொள்ளப்படும். எனவே, நமது வேலைகளைப்பற்றி அறிவிப்பதிலிருந்து ஊடகங்களின் புதிய வடிவங்களை தடுப்பதற்காக நமக்கு எந்த நன்மையையும் பயக்கப்போவதில்லை. நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை அறிவிப்பதற்கான (டிவிட்டர் உள்ளடங்கலாக) நேரடி உரை அடிப்படையிலான படிவங்களின் தொலைத்தொடர்பு பயன்பாட்டின் சூழமைவுகளில், இந்தக் கோட்பாட்டினை மனதில் வைத்து வேல்ஸ் மற்றும் இங்கிலாந்தின் தலைமை நீதிபதி கவனத்திற்கொண்டது[19].

> "ஊடகங்களின் ஒரு பிரதிநிதியோ அல்லது ஒரு சட்டக் கருத்துரையாளர் நீதிமன்றத்திலிருந்து உரை-அடிப்படையிலான தகவல் தொடர்புகளை நேரடியாக பயன்படுத்துவது தனிப்பட்ட வழக்குகளில் முறையான நீதி நிருவாகத்தில் தலையிடும் அபாயமாக காட்சிக் கொடுக்கவில்லை. **இது ஏனென்றால், நீதிமன்ற நடவடிக்கைகளை சரியாகவும் மற்றும் நியாயமாகவும் முன்னிடுவதற்கு ஊடகங்களை இயல்விக்கக்கூடிய உரை அடிப்படையிலான தகவல் தொடர்புகளை நேரடியாகப் பயன்படுத்துவதை அனுமதிப்பது மிகவும் வெளிப்படையான நோக்கமாகும். அதுபோன்று, நீதிமன்றங்களிலிருந்து உரை**

.....

19. நடைமுறை வழிகாட்டுதல்: <உெறச்டிடிபிஎஸ்://டபிள்யூடபிள்யூடபிள்யூ.ஜூரிடிசியரி.யூகே/டபிள்யூபி-கண்டென்ட்/அப்லோட்ஸ்/ஜெசிஷ/டாக்குமெண்ட்ஸ்/கைடென்ஸ்/ஐடிபிசி-கைடென்ஸ்-டிசம்-2011. பி.டி.எ.ஃப்>-இல் கிடைக்கப்பெறக்கூடிய கோர்ட் ஃபார் தி பர்பஸஸ் ஆஃப் ஃபேர் மற்றும் அக்யூரேட் லைவ் டெக்ஸ்ட்-பேஸ்ட் ஃபார்ம்ஸ் ஆஃப் கம்யூனிகேஷன் (டிவிட்டர் உள்ளடங்கலாகும்)

அடிப்படையிலான தகவல் தொடர்புகளை நேரடியாகப் பயன்படுத்த விரும்பும் ஊடகங்களின் ஒரு பிரதிநிதியோ அல்லது சட்டக் கருத்துரையினர் ஒருவர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்காமலும் அவ்வாறு செய்யலாம்."

28. தொழில்நுட்ப வளர்ச்சியின் விரைவான முன்னேற்ற வேகத்தை ஒப்புக்கொண்டு பணிவடக்கத்துடன் தனது பங்கினை நமது நீதிமன்றம் புரிந்துள்ளது. எனவே தொடர்ந்து வைத்துக்கொள்வது நமது தேவையாகும். (மேற்கண்ட) **ஸ்வப்னில் த்ரிபாதி** கவனிக்கப்பட்டது:

"சி. தொழில்நுட்பம் மற்றும் திறந்த நீதிமன்றம்

84. தற்போதைய தொழில்நுட்ப காலத்தில், வழக்குகளின் கேட்பு நடவடிக்கைகளும் மற்றும் அதனுடைய விளைவுகள் பற்றி தகவல்கள் வழங்கிட ஊடகங்களை தனிப்பட்டமுறையில் சார்ந்திருக்கவேண்டும் என்பது இனி இல்லை. வாழ்க்கையின் அனைத்து அம்சங்களில் ஒரு தவிர்க்கமுடியாத முகப்புக்கூறாக தொழில்நுட்பம் ஆகிவிட்டது. இணையதள ஊடுருவலும் மற்றும் திறன்பேசிகளை பயன்படுத்துவதிலும் உள்ள அதிகரிப்பும், நாம் எப்படி தொடர்புகொள்கிறோம் என்பதில் புரட்சி செய்துள்ளது. 31.3.2018 தேதிவரையில், இந்தியாவில் 1,206.22 மில்லியன் தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களும் மற்றும் 493.96 மில்லியன் இணையதள பயன்பாட்டாளர்கள் இருந்துவருகின்றனர். இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம், இந்திய தொலைத்தொடர்பு சேவைகள் நிறைவேற்றும் பொருளளவுகள் ஜனவரி-மார்ச் 2018 கிடைக்கக்கூடும். மாநில நிறுவனங்களின்

செயற்பாடுகளில் குடிமக்கள் முனைப்பாக செயலாற்றுவதற்கு வழிவகைசெய்யவும், வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யவும், பொதுமக்களுக்கான வாய்ப்பினை தொழில்நுட்பத்தால் அதிகப்படுத்த முடியும். உடல்சார்ந்த அணுகத்தக்க தன்மையைக் கடந்து கோளியல் அணுகுமுறைக்கு இடம்பெயர்வதின்மூலமாக திறந்த நீதிமன்றங்களின் கோட்பாடுகளை மதிப்பேற்றுவதற்கு நீதிமன்றங்களுங்கூட தொழில்நுட்பத்தின் துணைகொள்ளவேண்டும்."

ஒரு புதிய நடைமுறையை ஏற்றுக்கொள்வது என்பதே அதை தழுவிச்செல்வதற்கான உறுதியான வழியாகும். நமது பொது அரசமைப்பு நிறுவனங்கள் முறையிடுவதைத் தவிர்த்து சிறந்த விடைகளைக் கண்டறிதல் வேண்டும்.

இ.3. பொதுக் கட்டுரை, ஊடக அறிவிப்பு மற்றும் நீதித்துறையின் பொறுப்புடைமை

29. பொது அதிகார எல்லையின் பகுதியாக இருக்கின்ற நீதிமன்ற நடவடிக்கைகள் உள்ளடங்கலாக, வாதச் செய்திகள் மற்றும் நிகழ்வுகளை பரப்புவதற்கும், அறிவிப்பதற்கும் ஊடகங்களுக்கு உரிமையுள்ளது என்று நாம் புரிந்துகொள்வது போன்று, உளதாந்தன்மையை அதிகரிப்பதும் மற்றும் தனிப்பட்ட நபர்களின் உரிமைகளை பாதுகாக்கும் ஓர் அம்சமாக இல்லாமல் மாறாக, நீதியின் முழுமையான விளைபயனாகவும், மேலும், நீதித்துறையின் நேர்மையை அதிகரிக்கும் செயல்முறைகளின் பகுதியாகவுங்கூட சூழமைவு சார்ந்திருப்பதும் முக்கியமானதாகும்.

30. தனி அறை நடவடிக்கைகளுக்கான விதிவிலக்குடன், ஒரு நீதிமன்ற அறை என்பது பொதுமக்களுக்கான இடமாகும். **அட்டர்னி ஜெனரல் -எதிர்- லெவல்லர் மேகசின்**[20]-இல் நீதியரசர் தீர்மானித்ததாவது, "நடவடிக்கைகளின் நியாயமான மற்றும் நேர்மையான அறிவிப்புகளை ஊக்கங்கொடுக்கும்படி நீதிமன்றங்கள் எதையும் செய்யக்கூடாது என்பதை திறந்த நீதிமன்றங்களின் கோட்பாடு வேண்டுறுத்துகிறது" என்பதேயாகும். ஒரு திறந்த நீதிமன்றம் மற்றும் வெளிப்படையான நீதிவழங்கலில் உள்ள அதனுடைய அனைத்து முறைகளும், அதற்குள்ளாகவே இருக்கும் ஒரு முடிவாகும். நாம் மேலே கலந்தாலோசித்ததுபோன்று, இந்த பெருமுயற்சியில் தொழில்நுட்பம் ஒரு விரைவுபடுத்தும் கருவியாகும், ஆனால் இந்த சிந்தனைகளின் முன்னோடி அல்ல. ஒரு நூற்றாண்டிற்கும் நிகராக நீதிமன்ற செயல்முறைகளை முறைப்படுத்தியதுடனாக ஊடகங்க அறிவிப்புகள் இயங்கியுள்ளன. குடியேற்ற இந்தியாவின் நீதிமன்ற நடவடிக்கைகள், குறிப்பாக, அரசு பகைமூட்டு குற்ற விசாரணைகள் கூட அரசியல் போட்டியிடுதலில் குடியேற்ற கொடுமைகள் மற்றும் அவமதிப்புகளை வெளிப்படுத்திய குறியிடங்களாகும். அரசு பகைமூட்டு குற்றத்திற்காக லோகமன்ய பாலகங்காதர் திலக் அவர்களின் முதல் விசாரணையின்மீதான பரவலான அறிக்கையானது சான்றாயத்தின் தீர்ப்புரை ஒருமனதற்றதாக இருந்தபோதிலும், தண்டனை விதிக்கப்பட்டது, மேலும், சட்ட உதவி கிடைக்கப்பெறுவதற்காக அவர் போராடியதும், விதிமுறைச் சட்டங்கள்

.....

20. *(1979) ஏ.சி. 440*

மற்றும் உரிமைகளில் உள்ள முக்கியமான வேறுபாடுகளை முன்னிலைப்படுத்தி இந்திய விசாரணைக் கைதிகளுக்கு மறுக்கப்பட்டது. தண்டனை விதிக்கும் செயல்முறைகளை முறைப்படுத்தியதுபோன்ற ஆணையின் வாயிலாக பதிவுசெய்கையில், லோகமான்யரின் கிளர்ச்சி தூண்டுகிற வார்த்தைகள், குடியேற்றத்திற்கு எதிரான பிரசுரங்களின் மூலமாக நெடுந்தொலைவாகவும், பரவலாகவும் விற்பனை செய்யப்பட்டு இந்திய சுதந்திரப் போராட்ட உணர்ச்சியை பெருக்கும் பொருளாயிற்று. இம்மாதிரியான வார்த்தைகள் இதுநாள்வரையில் பம்பாய் உயர் நீதிமன்றத்தில் உள்ள நீதிமன்ற அறைக்கு மிகவும் வெளிப்புறமாக உள்ள உலோக வில்லையைக்கூட தற்செயலாக அலங்கரிக்கின்றது[21].

> "சான்றாயத்தின் தீர்ப்புரை அப்படியிருந்தும் நான் ஏதுமறியாதவன் என்றே மெய்ப்பித்து நிலைநிறுத்துகிறேன். தேசங்கள் மற்றும் ஆண்களின் விதியினை உயர்ந்த அதிகாரங்கள் ஆளுகின்றன, ஆகவே எனது எஞ்சியிருக்கும் சுதந்திரத்தை விட, நான் பிரதிநிதித்துவம் செய்யும் காரணம் எனது துன்பங்களால் மிகவும் செழிப்படையும் என்பதே கடவுளின் விருப்பமாகும்."

31. சுதந்திரத்திற்குப் பின்னால், அரசு பகைமூட்டும் குற்றங்கள் அரசமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாக செய்தித்தாள்கள் மற்றும் நாளேடுகளில் பரவலாக அறிவிக்கப்பட்டதற்கு சான்றாக இருந்தது - பகரப்பட்ட தீர்ப்புரைகள் இன்றி, மாறாக, நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்களின் சொற்புரட்டுகளையுங்கூட அறிவித்தது. இம்மாதிரியான கதைகள் நமது

.....

21.எம்பரர் -எதிர்- பாலகங்காதர் திலக், (1908) 10 பிஓஎம்எல்ஆர் 848 (பம்பாய் உயர் நீதிமன்றம்)

தொழிலின் மரபுரிமைப் பண்பாக இப்போதும் கடந்து செல்கிறது. மேலும், நமது சட்டப்படிப்பிற்கான பயனுள்ள சூழலையுங்கூட தருகின்றது.

32. எனினும், திறந்த நீதிமன்றங்களினுடைய மதிப்பான சூழமைவில், **மிராஜ்கர்** (மேலே) நீதிமன்ற நடவடிக்கைகளின் செய்திப்பரப்புமீது வலியுறுத்தப்பட்ட ஷரத்துகள் பின்வருமாறு:

> "ஒரு நீதிமன்றம் என்பது மக்களின் அவையாகும். நீதிமன்றங்கள் உடனடியாக நீதியை வழங்குகிறது என்ற பொது விளம்பரங்கள் குடிமக்களை நம்பவைக்கின்றது. மேலும் அதனால்தான், பொதுமக்களுக்கு விசாரணையானது வெளிப்படையாக இருத்தல்வேண்டும். நீதிமன்ற நடவடிக்கைகளை அறிவிக்கின்ற செய்திப்பரப்பின்மீது கட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது. நீதி நிருவாகத்தில் பொதுமக்களின் நம்பிக்கையை செய்திப்பரப்பினால் உருவாக்குகிறது. நீதியரசர்..... ஹெறகல் அவரது உரிமைகளின் வேதாந்தத்தில் நீதிமன்ற நடைமுறைகள் வெளிப்படையாக இருக்கவேண்டும் என்பதை நிலைநிறுத்தியுள்ளார், நீதிமன்றத்தின் குறிக்கோள் நீதி என்ற காரணத்தினால், எல்லாகாலத்திலும் அனைவருக்கும் உரியதானதாகும்."

33. தொழில்நுட்ப வருகையுடன், அதிகப்படியான பார்வையாளர்களுக்கு, நிகழ்நிலை செய்திகளை சமூக ஊடக மன்றங்களின்வாயிலாக விரைந்து பெருக்கும் அறிவிப்பை நாம் பார்க்கின்றோம். முந்தைய பிரிவில் நாம் கலந்தாலோசித்ததுபோன்று, இது ஊடகங்கள் உண்மையாகப் பெற்றிருக்கும் பேச்சு மற்றும் சிந்தனை வெளியீட்டு சுதந்திரத்தின் ஒரு விரிவாக்கமாகும். திறந்த நீதிமன்றத்தின் 'மெய் நிகர்' தொடர்பகமாக அமைகின்றது. இந்தக்

குறிப்பிடத்தக்க சம்பவம் அச்சத்தின் விளைவினால் அல்ல, மாறாக நீதித்துறையின் நேர்மையினால் அதனுடைய செயல்பாடுகளில் கவனம் செலுத்தி நமது அரசியலமைப்பின் நடைமுறை வழக்கங்களை உயர்த்திப் பிடிப்பதற்கான பாராட்டுதலாகும். உலகம் முழுவதுமுள்ள பல்வேறு நீதிமன்றங்களில் யூ.எஸ். உச்ச நீதிமன்றம், யூ.கே. உச்ச நீதிமன்றம், யூ.கே. மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நடவடிக்கைகளை இதர பொருத்தமான செயல்பாட்டுமுறைகளை வெளிப்படையாக அணுகியும் அல்லது நேரடி ஒளிபரப்பின் வாயிலாகவும் பொதுமக்களின் பார்வையாளர்களை இயல்விக்கிறது. நீதி பரிபாலனையில் பொதுமக்களின் பங்கினை அதிகரிக்கும் முயற்சியில் குஜராத் உயர் நீதிமன்றமுங்கூட அதனுடைய நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. இதன் பின்னடைவில், நீதியின் நுழைவுரிமை மற்றும் சட்டத்தின் ஆட்சியை ஒருபுறம் இந்நீதிமன்றம் உயர்த்துவதற்கும், மறுபுறம் நடவடிக்கைகளை அறிவிப்பதனை நிறுத்துவதன் மூலமாகவும், ஊடகங்களின் அனைத்து வடிவங்களிலிருந்தும் இந்நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் தினசரி செயல்பாடுகளை பாதுகாப்பதும் பின்னோக்கிச் செல்வதாக இருக்கக்கூடும்.

இ.4. நீதித்துறை நடப்புமுறையும், அதன் சுதந்திரமும் மற்றும் கட்டுப்பாடுகளும்

34. 26 ஏப்ரல் *2021* அன்று கேட்பு நடவடிக்கையின்போது உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளால் செய்யப்பட்ட வாய்மொழி கூற்றுகளிலிருந்தது போன்று, சென்னை உயர் நீதிமன்றத்தின் கேள்விக்குள்ளான ஆணையிலிருந்து தேர்தல் ஆணையத்திற்கு மனக்குறை எழும்பவில்லை. எங்கள் முன்பான

வழக்கில் உயர் நீதிமன்றம் சேர்க்கப்படவில்லை, மேலும், பதிலுரைப்பதற்கான ஒரு வாய்ப்பும் கிடைக்கவில்லை. எனவே, சரியாகக் கூறப்பட்ட கூற்றுகள் மற்றும் நடவடிக்கைகளில் உண்மையாக நிகழ்ந்தது என்ன என்பதை எங்களால் கண்டறியமுடியவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகளின் சுவடுகள் குறிப்பிடப்பட்ட காலத்தில் நேரடி ஒளிபரப்பு செய்தாலன்றி (சுவப்னில் திரிபாதி (மேலே) தீர்முடிவின் நிமித்தமான மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டது) வாய்மொழி நடவடிக்கையின் பதிவுருக்கள் இல்லாத நிலையில் இந்த முறையை தொடர்ந்து பீடித்துக்கொண்டிருக்கும். எனினும், தேர்தல் ஆணையம் போன்ற ஒரு அரசமைப்பு அதிகாரம், அதனுடைய உறுதிமொழி ஆணையின்போில் வாய்மொழியான கூற்றுகளைக் குறிப்பிடுகிறது. எதிர்மேல்முறையீட்டாளர்களின் வழியாக இவைகள் விவாதிக்கப்படவில்லை. இந்த வாய்மொழியான கூற்றுகள் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் பெருமளவிலான வரவேற்பைப் பெற்றது. உயர் நீதிமன்றத்தின் தனிப்பட்ட அரசமைப்பு தகுநிலையில் தாங்கள் கொண்டிருக்கும் மதிப்பினால், உயர் நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளரிடமிருந்து உறுதிப்படியான அறிக்கைக்கு அவசியமில்லை.

35. சட்டமன்றம் மற்றும் செயலாட்சிக் குழுவிலிருந்து நீதித்துறையின் தன்னாட்சி நமது குடியரசின் ஆதாக்கல் ஆகும். தன்னுரிமையானது பாரபட்சமில்லாமலும், ஒரு சார்பிலிருந்து தொடர்பற்றும், மேலும், அதிகாரத்திலிருப்பவர்களின் செயல்களால் தாக்கு விளைவுறாலிருக்கச் செய்கிறது, எனினும் நன்கு நிறுவப்பட்ட இயற்கை நீதி கோட்பாடுகளின் உருவரைகளுக்குள்ளாக நீதிமன்ற நடவடிக்கைகளை நடத்துவதற்கு

நீதிபதிகளுக்கான தன்னுரிமையையுங்ட அங்கீகரிக்கின்றது. நீதிபதிகள் அவர்களுடைய கடமையை செயல்புரிவதிலும் அவர்கள் வசமாகக் கொண்டிருக்கும் அலுவலகத்தின் ஆணையின் நம்பிக்கைக்குரியவராக இருக்கவேண்டும், அரசமைப்பின் பற்றுறுதிக்கு ஆட்படும்படி அவர்கள் வேண்டுறுத்தப்படுகின்றனர். ஒரு தன்னாட்சி நீதித்துறையுங்கூட அதனுடைய செயல்கள் (மற்றும் விடுபடல்கள்) ஆகியவைகளுக்கு மக்களிடம் பதில் சொல்ல பொறுப்புடைய ஒன்றாகும்.

36. நீதித்துறை நடவடிக்கைகளை நடத்தப்படும் முறையானது, குறிப்பாக, நமது உயரிய நீதிமன்றங்களில், நீதி வழங்குவதில் மிகுந்த கடமைப் பொறுப்பினைக் கொண்டிருப்பதில் ஒவ்வொரு நீதிபதியும் தனித்தன்மை வாய்ந்தவர்கள் ஆகின்றனர். வாய்மொழியான கேட்பு நடவடிக்கைகளின்போது அமர்வுகளால் செய்யப்படும் குறிப்புரைகள் அல்லது எழுப்பப்படும் பிரச்சினைகள் விடயங்களை தீர்மானிக்கின்ற நீதிபதிகளுக்கு தெளிவுரைகள் வழங்குவது மட்டுமின்றி, அகத்தூண்டுதலால் வரும் சிந்தனையின்பேரில் கண்டறிந்து தெளிந்த அறிவுடன் தோன்றுகின்ற அவருடைய விவாதங்களை மேம்படுத்துவதற்கு வழக்கறிஞர்களையுங்கூட தடையின்றி அனுமதிக்கின்றது. பல சந்தர்ப்பங்களில், அவர்கள் முன்பாக முன்கொணரப்பட்ட விவாதங்களின் வலிமையைச் சோதிக்கவும் மற்றும் வழக்கினை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு உதவுகின்ற பதில்களை வேண்டிக் கேட்பதற்கு சட்ட ஆலோசகருடன் கலந்துரையாடத் தூண்டும் கருத்துரையாளராக நீதிபதிகள் பங்காற்றுகின்றனர். அங்குதான் பரிந்துபேசும் உண்மையான கலை

செயல்பாட்டிற்கு வருகிறது. இந்நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் தீர்ப்புரை எதிர்க்கும் தரப்பினர்களின் வாதக்கூறுகளுக்கு நீதிபதி கவனம் செலுத்தியதும், மேலும், பிரதிபலிப்பின் செயல்முறையையும் கண்டிப்பாக சுட்டிக்காட்டவேண்டும்.

37. சுதந்திரத்தின் நிமித்தமாக எழுபது ஆண்டுகளுக்கு மேலாக நமது சட்ட அறிவியலை வளப்படுத்தியும் மற்றும் தீர்ப்புரைகளில் பல குரலீடுகளை நீதிசார்ந்த பின்னணியின் வேறுபாடுகள் கொணர்ந்துள்ளது. ஒவ்வொரு நீதிபதியினுடைய உள்ளியல்பான மனிதத்தன்மை சட்டத்தின் பாஷையால் முழுயைான நீதி வழங்கிட எல்லை கடந்து அவர்களை அனுமதிக்கின்றது. நீதியை வழங்கும் முயற்சியிலும் நீதிமன்றத்தில் பொதுமக்களின் பார்வைக்குரிய ஆழ்ந்தாராய்வின்போது, நீதியுடன் தடையின்றி இணங்கும் சட்டத்தின் அடிப்படையிலான ஒரு ஏற்றுக்கொள்ளும் விளைவுகளுக்கு வந்தடையும் செயல்முறைகளை எளிதாக்கும்பொருட்டு குறித்துரைகள் செய்யப்படும், மேலும், முன்மொழிச் செய்திகளும் புதிதாகக் கொணரப்படும். கேட்பு நடவடிக்கைகளின்போதான கருத்துரைகள் கட்டுப்படுத்தும் தீர்முடிவாகவோ அல்லது ஒரு தீர்ப்புரையாக அமைந்திடாது. முரணியலான தரப்பினர்களின் போட்டிடும் தகவு நோக்குகள் எதுவோ அதன் இறுதியான விளைவின்மீது தீர்மானிப்பதற்கு ஒரு நீதிபதியை இயல்விக்கின்ற சிறந்த நிலையிலள்ள தற்காலிகமாகக் கொள்ளப்பெறும் நோக்குநிலையாகும். இந்தக் கருத்து மாற்றங்கள், தகவு நோக்குகள் மற்றும் ஒழுங்குமுறைகள் சட்டத்திற்கேற்ப சட்டத்துடன் இணங்கும் ஒரு தீர்வு வேண்டி படிப்படியாக தோன்றுவதற்கு எதிரான ஒரு பகுதியாகும். இந்த அமர்விலிருந்து ஒரு கருத்துரை பரிமாற்றங்கள்

பொதுவிடம் மற்றும் வெளிப்படையாகத் தீர்மானிக்கும் செயல்முறைகளுக்கு உள்ளியல்பானதாகும். ஒரு நீதிபதியின் மனத்தன்மையை வெளிப்படுத்துவதால் அவர்களுடைய கருத்துநிலையை அவள் மெய்ப்பித்துக்காட்ட எதிர்க்கும் தரப்பினர்களை இயல்விக்கிறது. இப்படியான சொல்லமைப்புகளின் ஊக்கம் கெடுமாயின் தீர்மானிக்கும் செயல்முறைகள் முடிவுறும். **சிரோஸ் -எதிர்- மூர்**[22]-இல் கோமான் டென்னிங் எம்.ஆர். கவனித்ததுபோல:

> "இம்மண்ணின் நீதிமன்றத்திலுள்ள ஒவ்வொரு நீதிபதியும் - உயர் நிலையிலிருந்து கீழ்நிலைவரை - அதே அளவு கடப்பாட்டுடனும் மற்றும் அதே படிநிலையின்படி பாதுகாக்கப்படவேண்டும். "சிந்தனையில் சுதந்திரமாகவும் மற்றும் தீர்ப்புரையில் தன்னுரிமையுடன் அவர் இருக்கவேண்டும்" என்ற காப்புரிமையின் அடியிலுள்ள காரணமாக இருப்பதை உறுதிசெய்யும்பொருட்டு ஒவ்வொரு நீதிபதிக்கும் அவரது படிநிலை என்னவாக இருப்பினும் பொருந்தும். நீதிமுறை சார்ந்து அவர்கள் செயல்படும்போது ஒவ்வொருவரும் இழப்பீட்டிற்கான கடப்பாட்டிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும். ஒவ்வொருவரும் தன்னுடைய பணிகளை அச்சத்திலிருந்து விடுபட்டும் மற்றும் முழுமையான தன்னுரிமையுடனும் செய்யவேண்டும். அவர் தனது புத்தகங்களின் பக்கங்களை கைகள் நடுங்கிக்கொண்டும் "ஒருவேளை நான் இதைச் செய்தால் இழப்பீடுகளுக்கு பொறுப்புடையவன் ஆவேனா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டும் திருப்பக்கூடாது. அவருடைய ஆட்சிவரம்புக்குள்ளாக அவை

.....

22. (1975) க்யூபி 118

இருக்கிறது என்ற நேர்மையான நம்பிக்கையுடன் தனது வேலைகளை அவர் செய்கின்றவரையில், அப்போது ஒரு செயலுக்கு அவர் பொறுப்பல்ல. அவர் சங்கதியைத் தவறாக எண்ணியிருக்கலாம். அவர் சட்டத்தை அறியாமலிருக்கலாம். அவர் என்ன செய்கிறார் என்பதும் அவருடைய ஆட்சிவரம்பிற்கு வெளியே இருக்கலாம் - சட்டத்தினாலோ அல்லது சங்கதியினாலோ - ஆனால், தனது அதிகாரவரம்பிற்குள்ளாக இருக்கக்கூடியது என்று நேர்மையாக நம்பிக்கொண்டிருக்கின்றவரையில், அவர் பொறுப்புடையவராகமாட்டார். ஒருமுறை அவர் இந்த நம்பிக்கையை நேர்மையாக ஏற்றுக்கொண்டால் மற்றவை எதுவும் அவரைப் பொறுப்புடையவராகச்செய்யாது. வன்மம், வெறுப்பு, மனச்சாய்வு அல்லது அந்த வகைபோன்ற சாட்டுரைகளுடன் அவருக்கு தொல்லையூட்டக்கூடாது. அத்தகைய சாட்டுரைகளின் அடிப்படையின்மீதான நடவடிக்கைகள் அறவு செய்யப்பட்டது, மேலும் தொடர்ந்து அடித்து அகற்றப்படும். அதைச் செய்வதற்கு அவருக்கு அதிகாரமில்லை என்று தெரிந்தே, அவர் நீதிமுறை சார்ந்து செயல்படவில்லை என்று காண்பித்தாலன்றி எதுவும் அவரை பொறுப்புடையதாக்காது"

காசிநாத்ராய் -எதிர்- ஸ்டேட் ஆ.ப் பீகார்[23]-இன் நீதிய பதிவுருக்களிலிருந்து எதிர்மறையான குறிப்புரைகளை நீக்குவது தொடர்பான விடயத்துடன் அணுகுவதற்கு இந்நீதிமன்றத்திற்கும் மேலும் ஒரு வாய்ப்பு அமைந்தது. இரண்டு நீதிபதி கொண்ட அமர்வு இந்த தீர்ப்புரையில் குறித்துரைத்தது:

.....

23. (1996) 4 எஸ்.சி.சி. 539

"7. இந்த கீழமை நீதிமன்றங்கள் வழக்குகளில் தீர்மானம் செய்வதில் சங்கதிகளின் மீதும், சட்டத்தின்மீதும் இவ்விரண்டிலுங்கூட சிறு அளவிலேனும் தவறாக தீர்மானம் செய்யக்கூடும் என்ற முற்கோளின் அடிப்படையில் மேல்முறையீட்டு மற்றும் சீராய்வு நீதிமன்றங்கள் அவ்வகையான உத்தரவுகளை சரிசெய்து அவர்கள் நிறைவளிக்கவும் வேறு இடங்கள்போன்று, நமது திட்டமுறையிலும் அமைக்கப்பட்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது. இந்த மனிதனின் அடிப்படைக் கல்விக்கூறுகள் ஒப்புரவில் முக்கியமான கூறாக உள்ளது. நீதிமன்றங்கள் கணினி போன்று இயங்கவேண்டும் என்று எதிர்பார்க்கமுடியாது. எவ்வளவு கடுமையாக இருந்தாலும் தீர்மானிக்கும் முறையிலும் மற்றும் தன்விருப்புரிமைகளின் அளாவுகையிலும் அவர்கள் முயற்சித்து தன்னைத்தானே முன் தீர்ப்புத்தடை மீது நடைபோடுவது போன்று வைத்துக்கொள்வார்கள். உயர் நீதிமன்றத்திற்கு அத்தகைய பொறுக்கமுடியாத பிழை அனைத்தும் எப்போதெல்லாம் கண்டறிந்து சுட்டிக்காட்டப்படுகிறதோ உரிய வழக்குகளில் இங்கும் அங்கும் உள்ள பிழைகளை நீதித்துறையின் தன்னுரிமை மற்றும் நீதிமன்றத்தின் உண்மையான மதிப்பினைப் பாதுகாத்தும், பொருந்துகின்ற முறையில் சரிசெய்யும்படியும் சம்மந்தப்பட்ட அலுவலருக்கு நியாயமாகவும், மென்மையாகவும், அவசியமான செயல்நோக்குடனும், காரணக்கூறுகளின் செயல்முறையின்வாயிலாகவும், மாறாக, தெளிவாகவும் மற்றும் முடிவு திசைக்குரியதும், ஆனால், கண்டித்துரைப்பது போன்று அரிதாகவும்

அதன் தீர்ப்புரையில் அதன் தகவலை தெரிவிக்கும்படி இயல்பாக வேண்டுறுத்தப்படுகிறது. மேலே பிரித்தெடுக்கப்பட்டதில் வெளிப்படுத்தப்பட்ட கூரிய பதிவு வகையில் நிறுவன இயங்குதலுடன் வைத்துக்கொள்வதல்ல. ஒரு நீதிபதி ஒரு தவறையோ அல்லது ஒரு பிழையோ பொறுத்திசைவின் எல்லைகளுக்கு அப்பால் செய்துவிட்டார் என்று முகப்புரையாக கூறுவது விதிவிலக்கான காரணங்களுக்காகவும் மற்றும் வேறேதேனும் நீடித்தாலன்றி, கீழ்நிலைப்பட்ட நீதிபதியின்மீது கண்டனத்தை சுமத்துவதற்கான காரணமல்ல. *(வலியுறுத்தப்பட்டது)*

டாக்டர் ரகுபிர் சரண் -எதிர்- ஸ்டேட் ஆ.ப் பீகார் மற்றும் ஒருவர்[24]-இல் கீழமை நீதிமன்றங்களின் நீதிபதிகள் அவர்களுடைய கருத்துகளை சுதந்திரமாக வெளியிடுவதற்கு இயல்விக்கும்படி உயர் நீதிமன்றங்களை இந்நீதிமன்றம் குறிப்பாக அறிவுறுத்தியது. தலைமை நீதிபதி கே. சுப்பாராவ், மூன்று நீதிபதி அமர்விற்காக பேசுகையில் கவனித்துரைத்தது:

"6. [...]

நான் இந்த கூற்றுகள் முழுவதையும் ஒப்புக்கொள்கிறேன். ஒவ்வொரு நீதிபதியும் தன் முன்பாக உள்ள சாட்சியத்தை மதிப்பீடு செய்யும் விடயத்தில் கண்டிப்பாக தனது எண்ணங்களை வெளிப்படுத்தவேண்டும் என்பதை நான் திரும்பக் கூறுகிறேன். **ஒரு குறிப்பிட்ட நீதிபதியால் பயன்படுத்தப்பட்ட சொல்நடை அவருடைய சொற்றொடரின் இசைவுநயம், ஆங்கிலமொழியின்மீது**

.....

24. (1964) 2 எஸ்.சி.ஆர். 336

ஒப்புமை செய்கிற அவருடைய அதிகாரம் மற்றும் பொய்யுரைக்கான அவரின் உள்ளுரைப் பதிவின்மீதே சார்ந்திருக்கும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் விருப்பத்திற்கேற்றாற்போல, குறிப்பிட்ட முன்வரைவாக உள்ளதா அல்லது இல்லையா என்பதை அவர் உறுதிசெய்ய வேண்டுமென ஒரு நீதிபதியின் மனதில் தோற்றுவிப்பதைக் காட்டிலும், நீதிசார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு மிகவும் தீங்கு தருவது எதுவுமில்லை. சில சமயங்களில் அவர் இலக்குகளை வரம்புமீறக்கூடும். பொது நலன்கள் முரண்படும்போது, சிறிதளவானது பெருமளவிலான ஒன்றுக்கு இசைந்து கொடுக்கவேண்டும். நீதித்துறை தன்னாட்சியினை பேணிப் பாதுகாப்பதன் பொது நலனில் ஒரு சாட்சியினுடைய தகுதியற்ற மற்றும் மதிப்பற்ற வசைமொழிகளை பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். அப்படியிருந்தாலுங்கூட, சாட்சிகளாகவோ அல்லது வேறுவிதமாகவோ அவர் முன்பு ஆஜராகும் நபர்களின்மீது தகுதிநிலையற்றும், மேலும் மதிப்பு தாழ்த்தும் இழிவுரைகளை செய்வதனால், சமமாக இருக்கும் நீதியின் போக்கிலிருந்து தாமாகவே பிறழ்வுறக்கூடாது என்ற கடமை நீதித்துறை அலுவலரின் மேலே சுமத்தப்பட்டுள்ளது. வெளிப்படுத்துதலில் உள்ள நடுநிலைத் தன்மை அவருடைய அலுவலகத்திற்கு மேன்மையை வழங்குகிறது, மேலும் நீதித்துறைக்கான பெருமளவு மரியாதையில் பங்களிக்கிறது. ஒரு குறிப்பிட்ட நீதிபதி, நியாயமில்லாமல், அவரது முன்பாக அல்லாத ஒரு சாட்சி அல்லது வேறேதேனும் நபரின்மீது அவதூறுகளை சுமத்துவது அத்தகைய சாட்சி அல்லது ஒரு நபரின் நற்குணங்களை பாதிப்படையச் செய்யும் சூழ்நிலைகளை மாறாக எழுப்பும்.

அதுபோன்ற இழிவுரைகள் அப்படிப்பட்ட நபரின் நற்பெயரையும், வாழ்வின் வளர்ச்சியையுங்கூட பாதிக்கும். எனது அனுபவத்தில், அத்தகைய வழக்குகளைக் கண்டது மிகவும் அரிதாகும். ஆனால் அவை நிகழும்பொருட்டு, மேல்முறையீட்டு நீதிமன்றம் பொருத்தமான வழக்குகளில் அந்த நீதிமன்றத்தால் செய்யப்பட்ட குறித்துரைகள் நியாயப்படுத்தப்படவில்லை என்பதும் முழுமையாகவே தவறானது மற்றும் முறையற்றது என்பதை சுட்டிக்காட்டுவதன் மூலமாக கீழமை நீதிமன்றத்தின் குறிப்புரைகள் நீதிமுறையில் சரிசெய்யலாம் என்னும் பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நீதியர் பேராயத்துடன் நான் உடன்படுகிறேன்." *(வலியுறுத்தப்பட்டது)*

38. நீதிமன்றத்தில் நீதிபதிகளுக்கு சிந்தனை வெளியீட்டு சுதந்திரத்தை அனுமதிப்பதும் நீதித்துறையின் தன்னுரிமையைப் பேணிப் பாதுகாக்கும் கடமையானது உருவெளி வடிவத்தின் ஒருபுறமாகும். சமநிலை முக்கியத்துவம் வாய்ந்த உருவெளி வடிவத்தின் மறுபுறமானது, நீதிபதிகளின் அதிகாரம் கட்டற்றதாக இருக்கக்கூடாது, எனவே, ஏதேனும் நிறுவனம் அல்லது தனிப்பட்ட நபரை குறைகூறுவதற்கு கடுமையாகவும் புண்படுத்துகிற பேச்சுகளை உபயோகிக்கும் முன்னர், நீதிய கடப்பாடுகளை செயற்படுத்தவேண்டும். **ஏ.எம். மாதூர் -எதிர்- பிரமோத் குமார் குப்தா**[25]-வில் இந்நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அமர்வு, நீதியரசர் கே. ஜெகன்நாத ஷெட்டியின் வாயிலாக பேசுகையில் தீர்மானித்தது:

.....

25. (1990) 2 எஸ்.சி.சி. 533

"13. **தரைப்படையின் செயல்திறன் போலவே ஒழுங்குமுறையான நீதியின் நிர்வாகத்திற்கு நீதிமுறைக் கடப்பாடு மற்றும் தண்டனைக் கருவி அவசியமாகும். கட்டுப்படுத்தும் கடமை, பணிவாக செயலாற்றுதல் நமது நீதிபதிகளின் நிலையான தகுதிக்கூறுகளாகும்.** தீர்மானம் செய்வதிலுள்ள இதுபோன்ற தகுதிகள் நீதித்துறையின் தன்னுரிமையை உயர்வாகப் போற்றிப் பாதுகாக்கும் அதிகாரம் நீதிபதிகளுக்கு அவசியமாகும். இதுகுறித்து நீதிமுறைக் கட்டுப்பாடு நீதித்துறை கண்ணியம் என்று அழைக்கப்படுவது சாலச் சிறந்ததாகும், அதாவது, நீதித்துறையால் கண்ணியமாக நடத்தப்படுவது நீதிமன்றத்தை நாடி வருகிறவர்களுக்கும், அத்துடன் மாநிலத்தின் சமவரிசையுடைய செயற்குழு மற்றும் சட்டமன்றமும் அவர்களுக்கு நன்மதிப்பு அளிக்கவேண்டும். பரஸ்பர மதிப்புத் தன்மை கட்டாயம் அங்கிருக்கவேண்டும். இந்த தகுதிநிலைக்கூறுகள் தவறும்போதும் அல்லது நீதிபதிகள் இந்த தகுதிப்பாடுகளில் தவறிவிட்டனர் என்று பொதுமக்கள் மற்றும் வழக்காடிகள் நம்புகின்றபோது, நீதிபதிகளுக்கும் நல்லதல்ல, நீதிமுறை செயல்பாடுகளுக்கும் நல்லதல்ல.

14. நீதிபதிகளின் அமர்வு என்பது அதிகாரத்தின் இருக்கையாகும். கட்டுப்படுத்தும் தீர்முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரத்தை நீதிபதிகள் மட்டுமே கொண்டிருப்பது அல்லாமல், அவர்களுடைய தீர்முடிவுகள் மற்ற அதிகாரிகளால் பயன்படுத்தப்படும் ஆட்சியுரிமையை ஏற்புடையதாக்குகிறது. நீதிமன்றத்தின் அதிகார எல்லையை

முழுமையாகவும் மற்றும் எதிர்வாதமற்ற கட்டுப்பாட்டை நீதிபதிகள் முழுமையாக கொண்டுள்ளனர். **ஆனால் அவர்கள் வழக்குரைஞர்கள், தரப்பினர்கள் அல்லது சாட்சிகளை புண்படும்படி குறைகூறவோ, தகுதியற்ற கேலிகளை செய்யவோ, வரம்புகடந்த கருத்துரைகளின் மூலமாக அவர்களின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.** தீர்மானித்ததற்காக அவர்கள் முன்பு வருகின்ற எல்லா விடயத்திலும் அதனுடைய சொந்த பற்றுக்கோளின்படி சுதந்திரமாக செயல்படுவதற்கு நீதிமன்றத்திற்கு உள்ளுரை அதிகாரம் உள்ளது என்று நாங்கள் ஒத்துக்கொள்கிறோம், ஆனால், எவருடைய நடத்தை பரிசீலனைக்கு வரப்பெற்று அவர்களின் நடத்தையை கருத்தில் பதிவு செய்துகொள்வது வழக்கின் தீர்முடிவிற்கு முற்றிலும் அவசியமென்றாலன்றி மதிப்புக் குறைக்கின்ற இழிவுரைகள் அந்த நபர்கள் அல்லது அதிகாரிகளுக்கு எதிராகவோ செய்திடக்கூடாது என்பதே முறையான நீதி நிருவாகத்திற்கான அதிக முக்கியத்துவமுடைய பொதுவான கொள்கையாகும்.

39. இந்த இரண்டு முனைகளை சரிசமப்படுத்துகையில், உயர்ந்த நீதிமன்றங்களின் பங்களிப்பு குறிப்பாக தொடர்புடையதாகும். அவர்களின் தனிப்பட்ட செயலாற்றுதலுக்கு தடை உண்டாக்காத அளவிற்கு தேவையில்லாமல் உயர் நீதிமன்றங்கள் அல்லது கீழமை நீதிமன்றங்களை இடித்துரைப்பதற்கு இடையே இந்நீதிமன்றம் ஒரு நடுநிலைக்கு வரவேண்டும். நீதிபதிகள்

எல்லைகடந்து நீதித்துறை உரிமையின் நியமங்களை மீறுகின்றனரோ அங்கு இந்நீதிமன்றம் கட்டாயம் தலையிடவேண்டும்.

40. இரண்டு தனிப்பட்ட அரசமைப்பு அதிகாரிகளின் உரிமைகளை சமநிலைப்படுத்தும் கடமைப் பொறுப்பு எங்களுடையதாகும். இந்நாட்டின் நீதித்துறை கட்டமைப்பில் உயர்தர மரியாதையை அனுபவிக்கின்ற ஓர் அரசமைப்பு நீதிமன்றமான சென்னை உயர் நீதிமன்றம் ஒருபுறம் உள்ளது. மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் மற்றும் முதல் கேட்புகை நீதிமன்றங்கள் போன்று உறுப்புக்கூறு 226-இன் கீழ் (சில வழக்குகளில் உரிமையியல் மற்றும் குற்றவியல் அதிகாரவரம்புடைய முதலேற்று நீதிமன்றங்கள் போன்றவை) நீதிப்பேராணை மனுக்களை ஏற்றுக்கொள்வதில் ஓர் உள்ளியல்பான பணியை இந்நீதிமன்றம் புரிகிறது. எவருடைய அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றதோ அந்த குடிமக்கள் தொடர்புகொள்வதற்கு பெரும்பாலான முதல் புள்ளியாகும். உயர் நீதிமன்றங்கள் அவர்களுடைய அதிகாரவரம்பிலுள்ள அடிப்படையான நடைமுறை நிலவரங்களுடன் தொடர்ந்து தொடர்பிலிருந்து வருகிறது. கோவிட்-19 கடுமையான நோய்த்தொற்றின்போது, பொதுமக்களின் உடல் நலத்திற்கு ஆபத்து விளைவித்து மனித இனத்தையே மூழ்கடிக்கும் அச்சுறுத்தல்களைச் சமாளித்ததில் நாடு முழுவதிலுமுள்ள உயர் நீதிமன்றங்கள் பாராட்டத்தக்க முன்னறிவு திறத்தை காண்பித்தது. எதார்த்தத்துடன் நேருக்கு நேராக அவர்கள் வந்தபோது அவர்களின் வேதனை அந்த உணர்வில் புரிந்துகொள்ளவேண்டும். மறுமுனையில் இந்த தேர்தல் ஆணையம், அரசியல் சாசனம் உறுப்புக்கூறு 324-இன் கீழ் தேர்தல்களை மேற்பார்வையிடவும் மற்றும் கட்டுப்பாட்டில் வைப்பதற்கான

நெருக்கடியான பொறுப்பேற்பு பணியுடன் கட்டளையிடப்பட்ட ஓர் அரசமைப்பு அதிகாரியாவார். எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களைச் சுற்றி நடக்கின்றவற்றை ஒழுங்குமுறைப்படுத்தியும், நியாயமாகவும், நேர்மையாகவும் தேர்தல்களை நடத்தியதன்வாயிலாக நமது மக்களாட்சி அரசமைப்பின் செயல்முறைகளை தேர்தல் ஆணையம் எளிதாக்கியுள்ளது. அதனுடைய தன்னாட்சி மற்றும் நேர்மை ஜனநாயகம் செழித்தோங்குவதற்கு அவசியமானதாகும். இந்த பொறுப்புடைமை நமது ஜனநாயக அரசியல் வெளியிடங்களில் ஜீவசுவாசத்தின் இடையிடையேயான பயிற்சி பாடங்களை நடத்துவதற்கான அதிகாரங்கள் கடமைகள் மற்றும் எண்ணற்ற செயல்பாடுகளை[26] உள்ளடக்குகின்றது.

41. இன்று, ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் ஆணையத்தின் செயல்கள் மற்றும் வழிகாட்டுதல்களின் அரசமைப்புச் செல்லுபடித்தன்மை அல்லது சட்டமுறைமையை தீர்மானிப்பதற்காக இந்நீதிமன்றம் அழைக்கப்பட்டிருக்கிறது. மெட்ராஸ் உயர் நீதிமன்ற நீதிபதிகளால் செய்யப்பட்ட குறிப்புரைகள் தொடர்பாக, தேர்தல் ஆணையம் வலியுறுத்தியதில் குறிப்பிட்ட குறைகளுக்கு நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொள்வதில், கோவிட்-*19* வழக்குகள் அதிகமடைந்து வந்த சூழ்நிலையை உயர் நீதிமன்றம் சந்தித்தது என்றும், குடிமக்களின் வாழ்வு மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதை நாங்கள் கண்டறிந்தோம். உயர் நீதிமன்றத்தின் குறிப்புரைகள் கடுமையானதாகும். இதன் உருவக வழக்கு பொருத்தமற்றதாகும்.

.....

26. மொஉறிந்தர் சிங் கிள் -எதிர்- தலைமை தேர்தல் ஆணையர் (1978) 1 எஸ்.சி.சி. 405.

உயர் நீதிமன்றம் - உண்மையாகவே வாய்மொழியான கருத்துரைகளைச் செய்திருக்குமாயின் மறைமுகமாக குறிப்பிட்டு - நாட்டிலுள்ள கோவிட்-19 கடுமையான நோய்த்தொற்றுக்கான குறைகூறும் நிலையை தேர்தல் ஆணையத்திற்கு உடைமையாகக் கருதும்படி கோரவில்லை. தேர்தல்களின்போது கோவிட்-19 தொடர்புடைய விதிமுறைகளை கண்டிப்புடன் பின்பற்றுவதை தேர்தல் ஆணையம் உறுதிசெய்யவேண்டும் என்று வலியுறுத்தும் எண்ணத்தை அதற்கு பதிலாகக் கொண்டிருக்கவேண்டும்.

42. அவ்வாறு கூறியிருந்தால், திறந்த நீதிமன்றத்தில் எளிதில் தவறாகப் பொருள்கொள்ளக்கூடிய உடனெழுச்சியான கருத்துரைகளைச் செய்வதில் நீதிபதிகள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுவது அவசியம் என்று நாம் வலியுறுத்தவேண்டும். மொழிநடை, அமர்வு மற்றும் அதன் தீர்ப்புரைகள் இவ்விரண்டும், நீதித்துறை உரிமையுடன் இணங்குவது அவசியமாகும். அரசியலமைப்பு பண்புக்கூறுகளுக்கு எளிதில் உட்படத்தக்க மொழிநடை நீதித்துறை செயற்பாடுகளுக்குரிய ஒரு முக்கியக் கருவியாகும். அரசியலமைப்பு நடைமுறை வழக்கங்களை தெளிவாகக் காட்டக்கூடிய உளச்சான்றுக்கு நீதியமொழி ஒரு சாளரமாகும். அதன் குறைத்துக்கூறும் துலாக்கோலினை இழந்து, மனித இனத்தின் மேன்மையைப் பாதுகாப்பது போன்ற அதன் குறியீட்டமர்வின் இடர்வரவு கருத்து வெளியிடும் முறையாகும். அரசியலமைப்பு சாசனத்தின் கீழ் நீதிய மறு ஆய்விற்கான அதிகாரத்தை உயர் நீதிமன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனுடைய நிலைமேடை உயர்ந்து இருப்பதால் அரசமைப்பின் அடிப்படை அம்சங்களின் ஒரு பகுதியாக அமைகிறது.

அதிகாரத்தை பாதுகாக்கும் பொறுப்பின் அளவுக்கூறுகள் மற்றும் அதன் தன்மையுடன் ஒரு நேரடி இணை உறவைத் தாங்குகின்ற பொறுப்பை இதுநாள்வரையில் கொண்டுள்ளது. தற்போதைய வழக்கில் வலியுறுத்தப்பட்ட மனக்குறையின் தன்மையை உயர் நீதிமன்றத்தின் விழிப்புடைமை மற்றும் முன்மதியின் தரத்தால் மட்டுப்படுத்தியிருக்கக்கூடும். கேட்பு நடவடிக்கைகளின் போது செய்யும் வாய்மொழியான கருத்துரைகள் அக்கணமே கடந்துவிடும், மேலும், பதிவுருக்களின் பகுதியாக அமைந்திடாது என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்தவேண்டியது அவசியமாகும். தேர்தல் ஜனநாயகத்தின் மீறத்தகா உயர்நிலையை உறுதிசெய்வதில் ஒரு குறிப்பிடத்தக்க பொறுப்பை சுமந்துகொண்டிருக்கும் ஒரு தனிப்பட்ட அரசமைப்பு சார்ந்த அமைப்பாக இருக்கின்ற தேர்தல் ஆணையம் தடம் பதித்துள்ளது. நாங்கள் கொண்டு வருவதற்கு முயற்சித்த விடயம் சமநிலை உணர்வுடன் இருக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

43. இம்மாதிரியான வாய்மொழி கருத்துரைகள் அதிகாரப்பூர்வ நீதித்துறை பதிவுகளின் ஒரு பகுதியல்ல, எனவே அவற்றை நீக்குவதற்கான கேள்வி எழவில்லை. ஒரு நீதித்துறை அமைப்பின் முறையான கருத்துகள் அதன் தீர்ப்புரைகள் மற்றும் ஆணைகள் மூலமாக பிரதிபலிக்கும். மேலும், கேட்பு நடவடிக்கைகளின்போதான வாய்மொழி கருத்துகள் அல்ல என்று கூறுவது சர்வ சாதாரணமாகும். எனவே, மேற்கூறிய கலந்தாய்வின் காரணமாக, நீதிமன்ற நடவடிக்கைகளை அறிவிப்பதிலிருந்து ஊடகத்தை தடுத்து நிறுத்தக்கோரும் தேர்தல் ஆணையத்தின் வேண்டுரையில் பொருள் இல்லை என்று நாங்கள்

கண்டறிந்தோம். நீதிமன்ற நடவடிக்கைகளை அறிவிப்பதற்கான ஊடகத்தின் சுதந்திரத்திற்கு இந்நீதிமன்றம் ஒரு நம்பிக்கை உறுதியான முன்மொழியாளராக நிற்கின்றது. பேச்சு மற்றும் சிந்தனை வெளியீட்டு சுதந்திரத்தைப் பற்றி பேச விரும்புகிறவர்கள், கேட்க விரும்புகிறவர்கள் மற்றும் கேட்கக்கூடியவர்ளுக்கு இது முழுமைவாய்ந்ததாக இருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நீதித்துறை பொறுப்புடைமையின் மதிப்புக்கூறுகளை நிலைநாட்டுவதில் ஓர் அரசியலமைப்பு நிறுவனம் போன்ற அதன் நீட்சியை சரியெனக் காட்டுகிறது.

ஈ) முடிவுரை

44. எங்களால் சுட்டிக்காட்டப்பட்ட காரணங்களுக்காக மேலே உள்ள வாசகங்களின்படி இந்த மேல்முறையீட்டைத் தீர்வு செய்கிறோம்.

45. நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் ஏதேனும் இருப்பின், முடிக்கப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய். சந்திரசூட்

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா

புது தில்லி,

06.05.2021.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதே அன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."